# THIRUMARAI AASAAN

**S. Rajanayagam**
**Editor**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 31 June 2018 Issue - 6


ஆசிரியர் உரை

## இது வேற ஸ்தேவான்

**ஸ்**தேவான் என்னும் பெயர் கொண்ட ஒருவரைப் பற்றி எழுதுவதற்கு ஸ்தேவான் என்று தலைப்பிடுவது தான் சரியானது. ஆனால், அதற்கு மாறாக, இது வேற ஸ்தேவான் என்று சொல்லும் படியான கட்டாயம் ஏற்பட்டுள்ளது. ஏனெனில், பரிசுத்த வேதாகமத்தில், குறிப்பாகப் புதிய ஏற்பாட்டில் பரிச்சயம் உள்ளவர்களுக்கு ஸ்தேவான் என்ற பெயரைக் கேட்டவுடன் சட்டென நினைவில் தோன்றி, உயர்ந்து நிற்பவர், இயேசு கிறிஸ்துவுக்காக முதல் இரத்த சாட்சியாக மரித்த அந்த ஸ்தேவான் தான். அதாவது, அப்போஸ்தவருடைய நடபடிகள் நூலின் ஆறாம் அதிகாரத்தின் பிற்பகுதியையும், ஏழாம் அதிகாரத்தின் ஒட்டுமொத்தத்தையும் ஆக்கிரமித்துள்ள ஸ்தேவான். இந்த ஸ்தேவானைப் பரிசுத்த ஆவியானவர் சிறப்பான வார்த்தைகளால் அலங்கரித்துள்ளார். ஆம், *பரிசுத்த ஆவியினாலும், ஞானத்தினாலும் நிரப்பப்பட்டு விசுவாசத்தோடு, நற்சாட்சியும் பெற்றவன் என்று* (அப்.6:3,5).

ஒருவேளை, அந்நாளில் எருசலேமில் இருந்த கிறிஸ்துவின் சபையின் குறைவற்ற செயல்பாட்டுக்காகத் தெரிந்துகொள்ளப்பட்ட, இதே தகுதியம்சங்களைக் கொண்ட *ஏழுபேரில் ஒருவர் தானே* இந்த ஸ்தேவான் என்று நீங்கள் சொல்லலாம். உண்மை தான். ஆனால் இந்த ஸ்தேவான் பற்றித் தொடர்ந்து பேசும் வேதாகமம், மற்ற ஆறுபேர் பற்றிப் பெரிதாகப் பேசுவதில்லை. இன்னும், இவன் தான் இயேசுவுக்காக இரத்த சாட்சியாக மரித்தானே தவிர (அப்.7:58-60), மற்ற ஆறுபேர் அப்படி மரிக்கவில்லை. ஆகவேதான், ஸ்தேவான் என்றவுடன் தாமதமில்லாமல் நம் மனக்கண் முன் இந்த இரத்தசாட்சி ஸ்தேவான் தோன்றிவிடுகிறான். ஆதித் திருச்சபையில் அங்கம் வகித்த இந்த உத்தம கிறிஸ்தவனுக்கு இப்படிப்பட்ட அங்கீகாரம் கொடுப்பதில் எவ்விதத் தவறும் இல்லை. எல்லாவகையிலும் இவன் தகுதியானவனே.

ஆனால், பிரபலமானவர்களுக்குச் *சலாம் போட்டு* பழக்கப்பட்டுவிட்ட உலக சமுதாயத்தின் போக்கு, கிறிஸ்தவ சமுதாயத்தையும் பதம் பார்க்காமல் விட்டுவைக்கவில்லையென்பது வருத்தமான ஒன்று. எப்படியெனில், பட்சபாதமில்லா தேவனைப் பின்பற்றுகிறோம் என்று சொல்கிறவர்கள், பரிசுத்த வேதாகமத்தின் பக்கங்களில் சிறப்பாகப் பேசப்பட்டிருப்பவர்களைச் சமநோக்கில் பார்க்காமல், ஒருவரை ஓஹோவென உயர்த்துவதும், மற்றொருவரை சுத்தமாக கண்டுகொள்ளாமல் இருப்பதும் எப்படி நியாயமாகும்? காலம் காலமாக தேவனைப் பின்பற்றுகிறோம் என்பவர்களிடம் இப்பாரபட்சம் காணப்படுகிறது. இந்த ஸ்தேவான் காரியங்களும் இந்நிலைக்கு விதிவிலக்காக இல்லை. இரத்தசாட்சி ஸ்தேவானை மெச்சிப்பேசும் அதே பரிசுத்த ஆவியானவர்தான், வேறொரு ஸ்தேவானையும் மெச்சுகிறார். ஆயினும், அப்படி மெச்சிப் பேசப்படும் இரண்டாவது ஸ்தேவான் யாரென்றும், எப்படிப்பட்டவன் என்றும் நம்மில் அநேகருக்குத் தெரியாது.

ஆகவே, ***இந்த வேற ஸ்தேவான்*** யாரொன்றும் இந்த ஸ்தேவானிடமிருந்து நாம் எவைகளைக் கற்றுக்கொள்ள முடியும் என்றும் கவனிப்போம். அதற்கு முன்பாக, நமது மாறாத வழக்கத்தின்படியாக, இவன் சம்பந்தப்பட்ட பின்னணிக் காரியங்களைக் கவனித்து விடுவோம். சரியா?

இந்த வேற ஸ்தேவான் 1கொரிந்தியர் 1:16-லும், 16-ம் அதிகாரம் 15-17 வசனங்களிலும் பேசப்பட்டிருக்கிறார். அதாவது, இந்தப் பிந்தின ஸ்தேவான், முந்தின ஸ்தேவானைப் போல் ***அதிகாரங்களை*** ஆக்கிரமித்தவனாக இல்லாமல் ***வெறும் நான்கு வசனங்களில்*** மட்டும் பேசப்பட்டிருக்கிறான். இந்தப் பிந்தின ஸ்தேவானைப் பற்றிய வரிகள் *கடுகைப் போன்று சிறுத்திருந்தாலும்* ***அதன் காரத்தில் குறையேதும் இல்லை***. முந்தின ஸ்தேவான் எப்படி நமக்குப் பாடங்களைக் கற்றுக்கொடுக்கத் தகுதியானவனோ அதுபோல் இவனும் நம்முடைய பக்தி வாழ்வுக்கான பாடங்களைக் கற்றுக்கொடுக்க எல்லா வகையிலும் தகுதியானவனே.

அப்போஸ்தலன் பவுலடியார் மேற்கொண்ட மூன்று நற்செய்திப் பயணங்களில், இரண்டாவது பயணத்தின்போது, ஆரம்பிக்கப்பட்டது தான் கொரிந்து பட்டணத்து சபை. பொதுவாகத் துணையோடு ஊழியத்திற்குச் செல்லும் பவுலடியார், சீலாவும், தீமோத்தேயுவும் மக்கெதோனியாவில் இருக்க நேர்ந்து விட்டபடியால், கொரிந்து பட்டணத்திற்குள் தனி ஆளாகவே நுழைந்தார். அறிமுகம் ஏதுமில்லாமல், கையிலே காசு பணமும் செலவழிந்த நிலையில் இங்கு வந்து சேர்ந்தார். அங்கே, அவரது உடனடித் தேவை கஞ்சிக்கு வழிதேடுவதாக இருந்தது. ஆகவே, இத்தாலியாவிலிருந்து கொரிந்துவுக்கு புதிதாய் வந்திருந்த ஒரு யூதத் தம்பதியை எப்படியோ தேடிக் கண்டுபிடித்து, அவர்கள், ***தானறிந்த கூடாரத் தொழில்*** செய்கிறவர்களாயிருந்தபடியால், அவர்களிடத்தில் தங்கி வயிற்றுப்பிழைப்புக்கான வேலை செய்ய ஆரம்பித்தார் [அப்.18:1-3].

இப்படிப்பட்ட ஓர் அசாதாரணச் சூழ்நிலையில் தான் கொரிந்து பட்டணத்தில் ஊழியம் ஆரம்பமானது. கைத்தொழிலைச் செய்துகொண்டு ஓய்வுநாள்தோறும் ஜெப ஆலயத்திலே சம்பாஷணை பண்ணி, யூதருக்கும் கிரேக்கருக்கும் புத்தி சொன்னான் [18:4]. கொரிந்துப் பட்டணத்தில், தான் எதிர்கொண்ட

மும்முனை நெருக்குதல் மனதில் ஆழமாகப் பதித்துவிட்டபடியால், பின்னாளில் கொரிந்தியருக்கு எழுதின முதல் நிருபத்தில் அதைக் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. அல்லாமலும் நான் *பலவீனத்தோடும், பயத்தோடும், மிகுந்த நடுக்கத்தோடும்* உங்களோடு இருந்தேன் என்று [2: 3]. பலவீனம் எனபதன் பொருள் புரிகிறது. ஆனால், பயமும், நடுக்கமும் எதற்கு என்கிறீர்களா? அத்தேனே பட்டணத்தில் ஏற்பட்டது போன்ற ஊழியத்தோல்வி இங்கும் ஏற்பட்டுவிடுமோ என்பதை நினைக்கும் போது பயம். அததோடு, இவ்வளவு அதிகமான ஆத்துமாக்களின் இரட்சிப்பு, இப்படிப்பட்ட பலவீனச் சூழலைச் சார்ந்திருக்கிறதே என்பதை எண்ணும் போது நடுக்கம். புரிகிறதா? இவனல்லவா தேவ ஊழியன்!

இப்படிப் பெலவீனம், பயம், நடுக்கம் இவைகளுக்கு மத்தியில் ஓய்வுநாள்தோறும் ஜெப ஆலயத்தில் உரையாடி, யூதருக்கும், கிரேக்கருக்கும் புத்தி சொல்லிக் கொண்டிருக்கையில், மக்கெதோனியாவிலிருந்து சீலாவும், தீமோத்தேயும் வந்து சேர்ந்தனர். ஊழியக் கூட்டாளிகளின் வருகை பவுலுக்குப் பலம் சேர்த்தபடியால், பவுல் ஆவியில் வைராக்கியம் கொண்டு, இயேசுவே கிறிஸ்து என்று யூதருக்கு திருஷ்டாந்தப்படுத்தினான் [அப்.18:4,5]. மானிட இரட்சிப்புக்கு அவசியமான இப்பேருண்மையை யூதர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. பொறுக்க முடியாத அளவு எதிர்ப்பு வந்தபடியால் பவுல் தன் வஸ்திரங்களை உதறி, உங்கள் இரத்தப்பழி உங்கள் தலையின் மேல் இருக்கும், நான் சுத்தமாயிருக்கிறேன், இது முதல் புறஜாதிகளிடத்திற்குப் போகிறேனென்று சொல்லி, ஜெப ஆலயத்திற்கு அடுத்து இருந்த யுஸ்து என்பவனுடைய வீட்டிற்கு வந்தான். கொரிந்துவில், பவுலுடைய வைராக்கிய ஊழியத்தின் விளைவாக, ஜெபஆலயத் தலைவனாகிய கிறிஸ்பு, அவன் வீட்டார், இன்னும் கொரிந்தியரில் அநேகர் விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றனர் [அப்;18:6-8]. இப்படிப்பட்ட ஓர் ஊழிய வெற்றியை அத்தேனே பட்டணத்தில் பவுலால் அறுவடை செய்ய முடியவில்லை.

இப்படிப் பவுலடியார், வைராக்கியம் கொண்டு, கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்காகப் பட்டபாட்டிற்கு கர்த்தரின் அங்கீகாரமும், உத்திரவாதமும், ஒரு தரிசனத்தின் மூலம் கிடைத்தது.ஆம், இராத்திரியில் கர்த்தர்; *நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே; நான் உன்னுடனே இருக்கிறேன், உனக்குத் தீமை செய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை; இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு என்றார்* [18: 9,11]. இதினிமித்தம் பவுல் ஒருவருடம்,ஆறு மாதங்கள் அங்கே தங்கி ஊழியம் செய்தார் [வ.11]. நாம் இங்கே பார்க்க இருக்கும் ஸ்தேவான் மற்றும் அவன் குடும்பத்தார் ஏற்கனவே கீழ்ப்படிந்த அநேகரில் அடங்கினவர்களாக இருந்திருக்க வேண்டும். ஏனெனில், ஸ்தேவானுடைய வீட்டார் அகாயா நாட்டிலே *முதற்பலனானவர்கள்* என்று குறிப்பிடப்பட்டுள்ளனர் [1கொரி.16:15].

விக்கிரக வணக்கங்களும், கலாச்சார சீரழிவும், ஒழுக்கக்கேடும் நிறைந்த உலகளாவிய வியாபாரக்கேந்திரமாக விளங்கிய கொரிந்துப் பட்டணத்தில், பெலவீனம் மற்றும் பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் கர்த்தருடைய சபையை ஏற்படுத்த முடிந்த பவுலடியாரால், அப்பட்டணத்தாருடைய கீழான

பழக்கவழக்கங்களைக் கொரிந்து சபையிலிருந்து முற்றிலுமாக வெளியேற்ற முடியவில்லை. ஆம், அவர்களுக்குள் என்னென்ன பிரச்சனைகள் இருந்ததென்பதை, இவர்களுக்கு எழுதின முதலாம் நிருபத்திலிருந்து நாம் தெரிந்து கொள்ளமுடியும். ஆவிக்குரிய சீரழிவுகளால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த சபையிலே, *குப்பையிலே கிடந்த குண்டுமணியாகத் திகழ்ந்தவன் தான் நம்முடைய ஸ்தேவான்.* இவன் பற்றி வேதம் விளம்புவதைப் பருங்கள். *சகோதரரே ஸ்தேவானுடைய வீட்டார் அகாயா நாட்டிலே முதற்பலனான வர்களென்றும், பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ் செய்யும்படிக்குத் தங்களை ஒப்புக்கொடுத்திருக்கிறார்களென்றும் அறிந்திருக் கிறீர்களே. இப்படிப்பட்டவர்களுக்கும் உடன் வேலையாட்களாய் பிரயாசப்படுகிற மற்ற யாவருக்கும் நீங்கள் கீழ்ப்படித்திருக்க வேண்டுமென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். ஸதேவான் பொர்த்துனாத்து, அகாயுக்கு என்பவர்கள் வந்ததற்காகச் சந்தோஷமாயிருக்கிறேன், நீங்கள் எனக்குச் செய்யவேண்டிய தாயிருந்ததை அவர்கள் செய்திருக்கிறார்கள். அவர்கள் என் ஆவிக்கும் ஆறுதல் செய்தார்கள்; இப்படிப்பட்டவர்களை அங்கீகாரம் பண்ணுங்கள்* [1கொரி.16:15-18].

சரி, இப்பொழுது, இவ்வளவு சிறப்புக்குரிய ஸ்தேவானிடமிருந்து நமக்கு எப்படிப்பட்ட பாடங்கள் கிடைக்கிறதென்று கவனிப்போம்.

**I. ஸ்தேவானும், வீட்டாரும் அகாயாவிலே முதற்பலனானவர்கள்**

குப்பையிலே கிடந்த குண்டுமணியான இந்த வேற ஸ்தேவானிடமிருந்து நமக்குக் கிடைக்கும் முதல்பாடம் சுவிசேஷத்தின் இரட்சிப்புக்கு உடனடியாகக் கீழ்ப்படிய வேண்டும் என்பது.

சுவிஷேசத்தின் உபதேசத்திற்கு ஒருவன் கீழ்ப்படிவதற்கு என்ன தேவை என்று ஒரு கேள்வி எழுப்பினால், பலவிதமான பதில்கள் வரும். அவைகளில் எது சரியானது என்று மீண்டும் கேள்வி எழுப்பப்படுமானால் மாறுபட்ட பதில்கள் வரும். ஆயினும், இதற்கு எது சரியான பதில் என்பதை இயேசுவானவர் விதைக்கிறவன் உவமையில் தெளிவுபடுத்தியுள்ளார். ***உண்மையும் நன்மையுமான இருதயம் தான் தேவை*** என்று [லுக்கா 18:15]. இப்படிப்பட்ட இருதயம் உள்ளவர்கள்தான் வசனத்தைக் கேட்கும் போது, குத்தப்படுவர்கள்[அப்.2:37]. இப்படிப்பட்ட இருதயம் உள்ளவர்கள் தான் ,ஆண்டவமாரே! இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும் [அப்.16: 30] என்ற கேள்வியை எழுப்புவார்கள் . இப்படிப்பட்டவர்கள்தான் கீழ்ப்படிவார்கள்.

இந்தப் பிந்தின ஸ்தேவான் அப்படிப்பட்ட இருதயமுடையவனாகவே இருந்துள்ளான். ஆகவே தான், சுவிசேஷம் அறிவிக்கப்பட்டபோது தாமதமின்றித் தன்னை முழுமையாக ஒப்புக்கொடுத்துள்ளான். இங்கே மெச்சப்பட வேண்டிய வேறொன்றும் இருக்கிறது. ஆம், அவன் *தன் வீட்டாரோடு* ஒப்புக்கொடுத்துள்ளான் என்பது இதன்மூலம் தன்னோடு இருந்த அனைவரின் நன்மதிப்பையும் பெற்ற ஒருவனாக வாழ்ந்துள்ளான். வீட்டாரோடு கீழ்ப்படிந்தவர்கள் என்று வரும் போது, நமக்கு முதலில் *கொர்நேலியு* [அப்.10:2] அடுத்து,

*லீதியாள்* போன்றவர்கள் தான் [அப்.16:15] நினைவுக்கு வருகிறார்கள். ஏன் இந்த ஸ்தேவான் வருவதில்லை? ஏன், இவர்களுடைய ஆத்துமாக்கள் விலைமதிப்பில்லாதவைகளா? நம்முடை ஆவிக்குரிய பார்வையில் ஏதோ கோளாறு உள்ளது.

பரிசுத்த ஆவியானவர், இந்த ஸ்தேவானையும், அவன் வீட்டாரையும், ***அகாயாவிலே முதற்பலன்கள்*** என்று கூறுவது கவனிக்கத்தக்கது. ஆரம்ப காலந்தொட்டு பரலோகத்தின் தேவன் ***முதற்பலனை*** விரும்புகிறவராகவே இருக்கிறார் [லேவி.23:9;யாத்.34:26 உபா26:10] அத்தோடு, ஞானி சாலொமோனின் கூற்றுப்படி ***முதற்பலனால் கர்த்தர் கனப்படுத்தப்படுகிறார்*** [நீதி.3:9]. ஆக, ஸ்தேவானாலும், அவனுடைய நன்னடத்தை கொண்ட பக்தி வழிகாட்டுதலால் நற்செய்திக்குக் கீழ்ப்படிந்த அவன் வீட்டாராலும் அகாயாவின் தலைநகரமான கொரிந்துவில் தேவன் கனப்படுத்தப் பட்டிருக்கிறார்.

சகலவிதமான பாவப் பழக்கவழக்கங்களில் மூழ்கித் திளைத்திருந்த ஒரு குடும்பம் தன்னை நற்செய்திக்கு ஒப்புக்கொடுத்து முதற்பலனானபடியால், நிச்சயமாகவே தேவன் கனப்படுத்தப்பட்டிருக்கிறார். தேவன் இதிலே பிரியப்பட்டபடியால் தான், இவன் பற்றிக் குறிப்பிடும்படி ஆவியானவரை ஏவியிருக்கிறார். இவர்கள் யாரைப்பற்றியும், எதைப்பற்றியும் கவலைப்படாமல், மாபெரும் தேவமனிதனாகிய யோசுவாவின் சிந்தை கொண்டு, நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம் [யோசுவா 29:15] என்பது போல, கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு ஒப்புக்கொடுத்து கீழ்ப்படிந்துள்ளார்கள். இந்த ஸ்தேவான் நினைத்திருந்தால், ***பேலிக்ஸ்*** போல், இப்பொழுது நீ போகலாம், எனக்கு சமயமான போது உன்னை அழைப்பேன் என்று கூறி இரட்சிப்பைத் தள்ளிப்போட்டிருக்கலாம் [அப்.24:25] அல்லது அகிரிப்பாராஜா போன்று, நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப்பண்ணுகிறாய் [அப்.26:28] என்று எக்குத்தப்பாகப் பேசி, சாமர்த்தியமாக நழுவியிருக்கலாம். ஆனால், இவர்களோ பெந்தெகொஸ்தே நாளில் இரட்சிக்கப்பட்ட பாக்கியசாலிகள் போல், பவுலடியாரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டு, அவன் எடுத்துச்சொன்ன சுவிசேஷத்தின் உபதேசத்திற்கு சமூலமாகக் கீழ்ப்படிந்து இரட்சிக்கப் படிருக்கிறார்கள்.

அருமையானவர்களே! சுவிசேஷத்தின் உபதேசத்திற்குக் கீழ்ப்படிகிற காரியத்தில் நாம் எப்படிபட்டவர்களாக உள்ளோம்? உலகமெங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்று சொன்ன இயேசுவின் பிரதான கட்டளை அன்று முதல் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அந்தச் சுவிசேஷத்தின் உபதேசம் கொரிந்துப்பட்டணத்து ஸ்தேவானிடம் சென்றடைந்தது போல, நம்மிடமும் வந்து கொண்டிருக்கிறது. நாம் என்ன செய்து கொண்டுள்ளோம்? ஒருவேளை நாமும் நம்முடைய வீட்டில், ஊரில், பட்டணத்தில் முதற்பலன்களாக மாற விரும்பினால் நற்செய்திக்குக் கீழ்ப்படிவது நல்லது. தேவன் அதிலே பிரியப்படுவார். அத்தோடு, நம்மால் தேவன் கனப்படுத்தப்படுவார். இந்த இரண்டும் நம்மால் நடக்கும் போது, தேவ ஆசீர்வாதம் நமக்கும், நம் குடும்பத்திற்கும் கிடைக்கும்.

## II. பரிசுத்தவான்களின் ஊழியத்திற்குத் தங்களை ஒப்பிகொடுத்துள்ளான்

குப்பையிலே கிடந்த குண்டுமணியான இந்த வேற ஸ்தேவானிடமிருந்து நமக்கு கிடைக்கும் இரண்டாம் பாடம் பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்வதில் சோடைபோகக் கூடாது என்பது.

கிறிஸ்தவத்தில் தவறாகப் பயன்படுத்தப்படும் வார்த்தைகளில் ஒன்று ஊழியம். அதாவது, ஊழியம் என்றால் அது அதிகாரம்மிக்க செயல்படுகளுடையது என்றும், அதற்குரிய பிரத்யேக ஆடையை உடுத்திக்கொண்டு உருப்படியாக எந்த வேலையும் செய்யாமல், வேதாகமத்தைக் கையிலே தூக்கிக்கொண்டு, மேடை ஏறிப் பிரசங்கித்து , செல்லுமிடங்களில் முதன்மையான இடத்தை எதிர்பார்த்துத் திரிவது என்று நினைக்கிறார்கள். அப்படி நினைப்பதில் தவறேதுமில்லையேன்பது போல், இன்றைய கிறிஸ்தவ சமுதாயத்தின் அங்கீகாரமும் முழுமையாகக் கிடைக்கிறது. ஆனால், ***ஊழியம் என்பது ஒரு வேலை அல்லது ஒரு சேவை.*** இக்கருத்துக்கு வலு சேர்க்க நம் இரட்சகரின் வார்த்தைகளை நாம் கவனிப்போம் ***ஊழியங்கொள்ளும்படி நான் வராமல், ஊழியஞ்செய்யவே வந்தேன் என்று கூறியுள்ளார்*** [மாற்கு 10:45]. இயேசு ஆண்டவரின் இச்சிந்தையை இன்றைய ஊழியச் சமுதாயம் தூக்கிக் குப்பையில் போட்டு காரியமாற்றிக் கொண்டிருக்கும்போது, இந்த ஸ்தேவான், இயேசு ஆண்டவருடைய கூற்றின் உண்மையை உணர்ந்து அதற்கேற்றாற் போல் வாழ்ந்துள்ளான்.

ஸ்தேவானும்,வீட்டாரும் பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்யும்படிக்குத் தங்களை ஒப்புவித்திருக்கிறார்கள் என்று வாசிக்கிறோம் [16:15]. ***இங்கே ஊழியம் என்பது குறைவிலும், தேவையிலும், வியாதியிலும்*** இருந்த கொரிந்து சபையாருக்குத் தங்கள் பங்களிப்பைச் செய்துள்ளதையே குறிக்கிறது. இப்படிச் செய்யவேண்டும் என்பது பவுலடியாரின் போதனை என்பதை விட, இயேசுவின் உபதேசம் என்பதே சரி. ஆம், பசியாயிருந்தேன், எனக்குப் போஜனங்கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; அந்நியனாருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள்; வஸ்திரமில்லாதிருந்தேன்,எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள்; வியாதியாயிருந்தேன் என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலிலிருந்தேன் என்னைப் பார்க்கவந்தீர்கள் என்பர் [மத்.25:35,36]. அத்தோடு,மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் [மத்.25:40]. ஸ்தேவான் வீட்டாரின் ஊழியம் இந்த வகையைச் சார்ந்ததே.

இவர்கள் பற்றி ஆவியானவர் சொல்வதை இன்னும் கொஞ்சம் நெருங்கிப் போய் பார்த்தால், மேலும் ஓர் உண்மையை அறிந்து கொள்ள முடியும். ஆம், இப்படிப்பட்ட ஊழியத்தை இவர்கள் வாய்ப்புக் கிடைக்கும்போது மாத்திரம் செய்யாமல், இன்னும் முடிந்தளவு செய்யாமல், இவ்வகை ஊழியத்திற்குத் தங்களை ஒப்புக்கொடுத்துச் செய்திருக்கிறார்கள். பரலோகத்தின்

தேவன் இவர்களை விசேஷமாகக் கண்ணோக்கி, நம்முடைய மனகண்களுக்கு முன் வெளிச்சம் போட்டுக் காட்டுவதற்குக் காரணம் இவர்களின் ஒப்புக்கொடுத்தலே. தேவன் நாம் அவருக்காக ஒன்றை ஒப்புக்கொடுப்பதை எப்போதும் பெரிதாகப் பார்க்கிறார், அதை அங்கீகரிக்கிறார், அப்படிப்பட்டவர்களை மேன்மைப்படுத்தி ஆசீர்வதிக்கிறார்.

அருமையானவர்களே! அவருடைய நாமத்தினிமித்தம் பிறருக்கு, குறிப்பாகப் பரிசுத்தவான்களுக்கு உதவி செய்வதை தேவன் சிறப்பான ஒன்றாகப் பார்க்கிறார். பவுலடியார் ரோமாபுரியாருக்கு எழுதும்போது, *பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவிசெய்யுங்கள்; அந்நியரை உபசரிக்க நாடுங்கள் என்று* கூறியுள்ளார் [12:13]. சுவிசேஷம் அறிவிப்பவர்களுக்கும், தேவையில் இருக்கும் பரிசுத்தவான்களுக்கும் உதவி செய்வது அவசியம். தேவன் அதை மெச்சுகிறார். இபபடிப்பட்ட ஒரு செயல்பாட்டிற்காகத்தான், ஒநேசிப்போருவை தேவன் மது எழுத்துக்களில் இவ்விதம் பாராட்டியுள்ளார். *ஒநேசிப்போருவின் வீட்டாருக்குக் கர்த்தர் இரக்கங்கட்டளையிடுவாராக; அநேகந்தரம் என்னை இளைப்பாற்றினான்; என் விலங்கைக் குறித்து அவன் வெட்கப்படவுமில்லை*[2தீமோ 1:16] என்று.

சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் தண்ணீருக்குக்கூடப் பலன் உண்டு என்று சொல்லும் தேவன் [மத்.10:42], பரிசுத்தவான்களுக்கும், நற்செய்திப் பிரசங்கிகளுக்கும் செய்யும் உதவிகளுக்கு பலன் கொடுக்காமல் விடமாட்டார். இந்த உண்மையைப் புரிந்து ஸ்தேவான் போலும், அவன் வீட்டார் போலும் செயல்பட்டு, தேவனிடமிருந்து இரக்கத்தையும், ஆசீர்வாதத்தையும் பெற்று சுகஜீவிகளாய் வாழ்வோமாக!

### III. ஒட்டுமொத்த சபையின் சார்பாகச் செயல்பட்டுள்ளான்

குப்பையிலே கிடந்த குண்டுமணியான இந்த வேற ஸ்தேவானிடமிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு பாடம், ஒட்டுமொத்த சபையின் சார்பாகக் காரியமாற்றியுள்ளான் என்பது.

அகாயாவில் முதற்பலன்களாகி, பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்யத் தங்களை ஒப்புக்கொடுத்ததோடு நிற்காமல், ஒட்டுமொத்தச் சபையின் சார்பாகச் செயல்படவேண்டிய நேரம் வந்த போது, அது சபையின் ஏகோபித்த பொறுப்பு *எனக்கென்ன என்று நினைக்காமல்*, துணைக்கு இரண்டு சகோதரர்களைச் சேர்த்துக்கொண்டு செயல்பட்டிருக்கிறான் இந்த ஸ்தேவான். ஆம், ஸ்தேவான், பொர்த்துனாத்து, அகாயுக்கு என்பவர்கள் வந்ததற்காகச் சந்தோஷமாயிருக்கிறேன், *நீங்கள் எனக்குச் செய்யவேண்டியிருந்ததை அவர்கள் செய்திருக்கிறார்கள்* என்று பவுல் கூறியுள்ளார் [1கொரி.16:17]. இங்கே நீங்கள் செய்யவேண்டியது என்பது ஒட்டுமொத்த கொரிந்துப் பட்டணத்துச் சபை செய்யவேண்டியது.

கொரிந்து சபையார் செய்யவேண்டியதாயிருந்தது எது என்று எதுவும் சொல்லப்படவில்லை. ஆனால்,ஏதோ இருந்திருக்கிறது. அது இந்த மூன்றுபேருடைய வரவால் செய்து முடிக்கப்பட்டிருக்கிறது. இப்படிச் செய்யப்பட்டது பவுலடியாரின்

ஆவிக்கும் ஆறுதல் கொடுத்திருக்கிறது. கொரிந்தியரின் பங்கு இவர்கள் மூலம் நிறைவேற்றப்பட்டிருப்பதால், ஒட்டுமொத்த சபையாரின் ஆவிக்கும் அது ஆறுதலைத் தந்திருக்கிறது. இங்கே, ஸ்தேவானோடு குறிப்பிடப்பட்டிருக்கிற மற்ற இரண்டு பேராகிய பொர்த்துனாத்துவையும், அகாயுக்குவையும் இந்த இடம் தவிர வேறு எங்கும் காணமுடியவில்லை. இந்த மூன்று பேரில், ஸ்தேவான் பெயர் முதலில் வருவதால், இவன்தான் தலைமையேற்று, இவர்களைச் சேர்த்துக் கொண்டு சபைக்காகச் செயல்பட்டிருக்க வேண்டும்.

இப்படிச் செய்யவேண்டுமென்று ஸ்தேவானுக்கு யாரும் கட்டளையிடவுமில்லை. ஸ்தேவான் இதைச் செய்தால் நன்றாய் இருக்குமே என்று எதிர்பார்க்கப்படவுமில்லை. ஆனாலும், இது சபையினுடைய பொறுப்புத்தானே என்று ஏனோதானோ என்று இராமல், சபைக்காகச் செயல்படுவதை ஒரு பாக்கியமாக எண்ணித் தானாக முன்வந்து காரியமாற்றியுள்ளான்.

அருமையானவர்களே! இன்றைய கிறிஸ்தவத்திற்கும், கிறிஸ்துவுக்கும், கிறிஸ்துவின் சபைக்கும் இப்படிப்பட்ட ஸ்தேவான்கள் அவசரமாகத் தேவைப்படுகிறார்கள். இப்படித் தானாக முன்வந்து செயல்படுவது தேவசிந்தை. தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை யாம் யாரும் கேட்காத நிலையிலே தான் நமக்குத் தந்தார் [யோவான் 3:16]. இப்படிப்பட்ட தேவ சிந்தை பல தேவமனிதர்களுக்குள்ளாக இருந்தே இருந்தது. ஆம், ஜீவனுள்ள தேவனுடைய சேனையை, விருத்தசேதனமில்லாத இராட்சத மனிதனாகிய கோலியாத் நிந்தித்தபோது, அவனை எதிர்த்துப் போரிட தாவீது தாமாகவே முன்வந்தான் [1சாமு. 17:24,32].

ஸ்தேவான் பற்றிய காரியம் இப்படியிருக்கும்போது, நாமெல்லாம் எப்படி? கேட்டால் பார்க்கலாம், மற்றபடி நமக்கெதற்கு வம்பு என்று தானே எண்ணுகிறோம். இது நியாயமாகுமா? ஸ்தேவான் மற்றும் அவனுடைய கூட்டாளிகள் மனமுவந்து சபைக்கு ஆற்றின செயல்பாட்டிற்காக அவர்களை அங்கீகாரம் பண்ணுங்கள் என்று ஆவியானவர் கூறியுள்ளாரே [வ.18]. தேவ அங்க்காரம் யாருக்குக் கிடைக்கிறதென்று கவனியுங்கள். தேவ ஆசீர்வாதம் ஒருவனுக்கு வேண்டுமென்றால், தேவ அங்கீகாரம் முதலில் வேண்டும். அப்படிப்பட்ட அங்கீகாரத்திற்கு தேவனுக்காக, கிறிஸ்துவுக்காக, சுவிசேஷத்திற்காக, சபைக்காக, பரிசுத்தவான்களுக்காகத் தாமாக முன்வந்து செயல்படவேண்டும். இதன் மூலம் ஆசீர்வாதங்கள் பரத்திலிருந்து சுரந்து வரும். தேவ ஆசீர்வாதம் பெற வேறு குறுக்கு வழிகள் கிடையாது. புரிந்து

ஆக, நம்மைப் போன்றவர்களால், இந்நாள் வரை பெரிதாகக் கண்டுகொள்ளாமல் விடப்பட்ட, இந்த வேற ஸ்தேவானிடமிருந்து கிடைக்கும் இப்பாடங்களை நாம் மனமார ஏற்று, அவனைப் போன்றும், அவன் வீட்டாரைப் போன்றும், இன்னும் அவனது கூட்டாளிகள் போன்றும் செயல்பட்டு, தேவ அங்கீகாரம் பெற்று, தேவஆசீர்வாதத்தோடு வாழ்வோமாக!

# அற்புத சுகமளித்தல்

Bro. J.C. சோட்

**கி**றிஸ்துவின் நாமத்தினாலே இன்றும் அற்புதங்கள் செய்யப்பட்டு வருகின்றன என கிறிஸ்துவை விசுவாசிக்கும் பெரும்பாலான மக்களிடையே வெகு சாதாரணமாகப் போதிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு போதிப்பவர்களும், முன்னோடியாக நின்று இச்செய்கைகளை நடத்துவோரும் பொதுவாக மிகவும் உணர்ச்சி வசப்படுபவர்களாகவும், கிறிஸ்து செய்த சகல அற்புதங்களையும், அற்புதங்களைப் பற்றிச் சொல்லப்படும் சகல வசனங்களையும் பட்டியலிட்டுக் காட்டுபவர்களாகவும் உள்ளனர். *இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராகயிருக்கிறார்* என்று எபிரெயர் 13:8–ம் வசனத்தையும் அவர்கள் குறிப்பிடத் தவறுவதில்லை. அந்த வசனம் உண்மைதான். ஆனால், இன்று இயேசு அற்புதங்களைச் செய்து கொண்டிருக்கிறார் என்று அது சொல்லவில்லை. முதல் ஆணும் பெண்ணும் ஓர் அற்புதத்தால் உண்டாக்கப்பட்டனர். ஆதியாகமம் 1:26, 27 வசனங்களின்படி, அந்த சிருஷ்டிப்பிற்கு கிறிஸ்துவும் ஒரு காரணமாக இருந்தார். ஆனால் இன்று அப்படிச் செய்யவில்லையே? எனவே, ஒரு வசனத்தை எடுத்துக்கொண்டு, நமக்குத் தேவையானதை அது கற்பிக்க வேண்டுமென்ற நமது விருப்பத்தின் காரணமாக, அது அவ்வாறு கற்பிக்கிறது எனக் கூற முயற்சிப்பது சரியல்ல. மாறாக, அற்புதங்களைச் செய்தது யார்? அவற்றைச் செய்யவேண்டிய அவசியம் என்ன? இன்றும் அற்புதங்கள் நடக்க வேண்டுமென்பது கர்த்தரின் எண்ணமா? இப்படிப்பட்ட கேள்விகளுக்கெல்லாம் நாம் விடைகாண வேண்டும்.

மேலும், இன்றைய நாட்களில், அற்புதங்கள் நடைபெறுகின்றன எனப் போதிப்போர், உணர்ச்சிப் பூர்வமான வேண்டுகோள் விடுக்கின்றனர். அதாவது, வியாதியஸ்தர்கள், உடல் ஊனமுற்றோர், மரணப்படுக்கையிலிருப்போர் இன்னும் இப்படிப்பட்டவர்கள் தங்கள் பிரச்சினைகளிலிருந்து விடுபட அற்புதங்கள் தான் ஒரே வழி. ஆகவே, அதை நம்ப வேண்டுமென்று, வேண்டுகோள் விடுகின்றனர். பல போதகர்கள் இதுபோன்ற முறையைப் பின்பற்றி புகழும் பணமும் சேர்த்திருக்கின்றனர். நோயாளிகளும், ஊனமுற்றோரும், துன்பப்படுவோரும் இயேசுவை மட்டுமே நம்பினால் போதும், அவர்களின் வாழ்விலும் அற்புதங்கள் நடைபெறும் என்று. அநேகமாக, அவர்களின் பிரசங்கம் முழுவதும் இயேசு செய்த அற்புதங்களைப் பற்றியே தான் இருக்கிறது. ஆயினும், மருத்துவமனைகள் வியாதிக்காரர்களால் நிரம்பி வழிகின்றன;

அறுவை சிகிச்சைகள் தொடருகின்றன; மனிதனுடைய நோய் நீக்கும் மருந்துகள் உலக முழுவதும் கோடிக்கணக்கான ரூபாய்களுக்கு விற்றுக் கொண்டுதான் இருக்கிறன; மேலாக, மக்களும் தொடர்ந்து மரணமடைந்து கொண்டுதான் இருக்கின்றனர். இயேசுவின் காலத்தைப் போல இன்றும் அற்புதங்கள் தொடர்ந்தால், அடிப்படையில் இவை அனைத்தும் மாறியிருக்க வேண்டுமே!

ஆனால், இயேசு அற்புதங்களைச் செய்தபோதிலும், இயேசுவின் நாட்களில் இருந்த வியாதிகள், நோய்கள், மரணங்கள், அனைத்தும் மறைந்து போய் விடவில்லையே? ஆனால், நாம் நினைவில் கொள்ளவேண்டியது என்னவென்றால், அவர் இந்த வியாதிகளை எல்லாம் சுகப்படுத்த இங்கு வரவில்லை. எல்லா உடல் ஊனமுற்றவர்களைச் சீராக்கவும், எல்லா குருடர்களுக்குப் பார்வையளிக்கவும், சகல செவிடர்களுக்கும் காது கேட்கவும், மரித்தோர் அனைவரையும் உயிரோடு எழுப்பவும் அவர் வரவில்லை. அவர் அந்தக் காரியங்களுக்காக வந்திருப்பாரேயானால், அவை அனைத்தும் செய்திருப்பார். ஆனால், *அவர் இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவும்தான் வந்தார்* [லூக்கா 19:10]. தாம் தேவனால் அனுப்பப்பட்டவர் என்றும், உண்மையில் தாம் தேவனுடைய குமாரன் என்றும் மக்களை நம்பச் செய்யவே அவர் அற்புதங்களைச் செய்தாரே தவிர, மக்களை சுகப்படுத்துவதற்காக மட்டும் அல்ல என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அவர் செய்த அற்புதங்களைச் கண்ட மக்கள் அவரை விசுவாசித்தார்கள் என்பது மீண்டும் மீண்டுமாக வலியுறுத்தப்பட்டிருப்பதை நீங்கள் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகியோர் எழுதிய சுவிசேஷ நூல்களைப் புதிய ஏற்பாட்டில் படித்தால் அறிய முடியும். உதாரணமாக, பஸ்கா பண்டிகையின் போது எருசலேமிலிருக்கையில், செய்த அற்புதங்களை அநேகர் கண்டு அவருடைய நாமத்தில் விசுவாசம் வைத்தார்கள் என யோவான் 2:23 ம் வசனத்தில் படிக்கிறோம். அடுத்து யோவான் எழுதும்போது, *இந்தப் புத்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீடருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது* [யோவான் 20:30,31] என்றார். எனவே, விசுவாசிகளை உண்டாக்கவே இயேசு அற்புதங்களைச் செய்தார். சுகமடைந்தவர்கள் சரீரத்தில் பயனடைந்தார்கள் என்பது உண்மையே. ஆனால், அவர் அவர்களைச் சுகப்படுத்த வேண்டிய உண்மையான காரணம் அதுவல்ல. அந்த அற்புதங்களைக் கண்ட சாட்சிகளிலிருந்து விசுவாசிகளை உண்டாக்குவதே உண்மையான காரணமாகும். சுகமாக்க வேண்டுமென்பதற்காக மட்டுமே இயேசு வியாதிக்காரர்களை சுகப்படுத்தினர் என்பது போன்ற அபிப்பிராயத்தை இன்றைய விசுவாச சுகமளிப்போர்

ஏற்படுத்துகின்றனர். அவர்களின் கூற்றுப்படி பார்த்தால், இன்று யாருமே வியாதிக்காரராக இருக்கக்கூடாது. அல்லது யாரும் மரிக்கக்கூடாது. அப்படியே மரித்துப்போனாலும் அவர்களை எழுப்பிவிட முடியும். ஆனால், வேடிக்கை என்னவென்றால், அவர்களின் இந்த கூற்றுக்களை எல்லாம் மீறி, காரியங்கள் எப்போதும் போல நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்த அற்புத சுகமளிப்பவர்கள் தவறவிட்டுவிட்ட சில அருமையான சந்தர்ப்பங்களை நான் உங்களுக்குக் காட்டமுடியும். உதாரனமாக, திருமதி. இந்திரா காந்தி அவர்கள் கொலை செய்யப்பட்டபோது, இந்த சுகமளிப்பவர்களில் எவராவது அங்கு சென்று அவரை உயிரோடு எழுப்பியிருக்கலாமே? அமெரிக்க நாட்டு ஜனாதிபதி ஜான் கென்னடி அவர்கள் சுடப்பட்டதுபோது, ஓரல் ராபர்ட் போன்றவர்கள் அங்கு சென்று ஜெபம் செய்து அவரை ஏன் எழுப்பவில்லை? சந்தேகமின்றி, அநேக சந்தர்ப்பங்ளை இவர்கள் தவற விட்டிருக்கின்றனர். இந்த உலகத்தலைவர்களைப் பற்றி இங்கு ஏன் குறிப்பிடுகிறோம்? ஏனெனில், இவர்களை எழுப்பியிருந்தால், அற்புதங்களுக்குச் சாதகமாகக் கிடைத்திருக்கக் கூடிய பெரிய விளம்பரத்தை நினைத்துப் பாருங்கள். இப்படிப்பட்ட அற்புதங்களால் உலகின் பல பகுதியிலுள்ள மக்களும் கிறிஸ்துவை விசுவாசித்திருப்பர். இந்தத் தலைவர்களை உயிரோடு எழுப்ப அற்புதங்களைச் செய்கிறோம் என்பவர்கள் ஏன் முயற்சிக்கவில்லை என்று உங்களுக்குத் தெரியுமா? ஏனென்றால், அப்படிச் செய்ய அவர்களால் முடியாது என்பதே காரணம். அவ்வாறு அவர்கள் செய்ய வேண்டுமென்பது கர்த்தரின் விருப்பமும் அல்ல. ஆனால், சந்தேகமின்றி, சகலவிதமான நொண்டிச் சாக்குகளையும் அவர்கள் சொல்லுவார்கள். தாங்கள் அற்புதங்களைச் செய்யவில்லை. கிறிஸ்துவே அவற்றைச் செய்கிறார் என்று கூறுவர். ஆம், கிறிஸ்து அவர்கள் மூலமாக கிரியை செய்வதாக அவர்கள் கூறுவர். கர்த்தரை அது சோதிப்பதாக இருக்கும் என்று மழுப்புவர். கர்த்தர் அவர்கள் மூலமாக செயல்பட்டு, அது உலக முழுவதும் விசுவாசிகளை உண்டாக்க காரணமாக இருக்குமானால், பின் அது எப்படிக் கர்த்தரைச் சோதிப்பதாக இருக்க முடியும்? மீண்டுமாக, இவர்களால் எந்த அற்புதத்தையும் செய்ய இயலாது. அது அவர்களுக்கும் நன்றாகத் தெரியும்.

முதுகு வலிகள், கைகால் வலிகள், தலைவலிகள், காய்ச்சல், இன்னும் இது போன்ற பல வியாதிகளை அவர்கள் சுகப்படுத்துவதாக சவால் விடுகின்றனர். ஆனால், உங்களுடைய மருத்துவரிடம் கேட்டால், இப்படிப்பட்ட பல வியாதிகள் உங்கள் மனதளவிலே இருப்பதாக அவர் கூறுவார். மேலும், இவ்வாறான சிறு நோய்களால் பீடிக்கப்பட்டவர்கள், இவற்றை அற்புதமாக சுகப்படுத்துவதாகச் சவால் விடுபவர்களைத் தீவிரமாக நம்பும் போது இந்நோய்கள் சுகமாகின்றன. ஆனால், கால், கண், கை இல்லாமல் அவதியுறும் ஏராளமான பேருக்கு இந்த அற்புத ஊழியங்களால் ஏன் சுகமளிக்க முடியவில்லை. இவர்களுக்கு மத்தியில் நடக்கும் அற்புதங்களைக் காண நாங்கள் காத்துக்கொண்டிருக்கிறோம்! இப்படிப்பட்ட அற்புதங்களை இவர்கள் செய்ய ஆரம்பித்தால், இன்னும் பல மக்கள் இவர்கள் சொல்லிக் கொண்டிருப்பதைக் கவனிக்கத் தொடங்குவர்.

ஆனால், அற்புதம் என்றால் என்ன? இயற்கையின் விதிக்கு மாறாகச் செய்யப்படும் ஒரு செயல் என இதற்கு சிறப்பானதொரு விளக்கம் உண்டு. அதாவது, ஒன்றுமில்லாமை யிலிருந்து ஒன்றை உண்டாக்குவது, அல்லது கை, கால் இழந்த மனிதனுக்கு புது கை அல்லது காலைக் கொடுப்பது, மரித்தவனை உயிரோடு எழுப்புவது இன்னும், இது போன்றவற்றைச் செய்வது தான் அற்புதம். நம்மால் புரிந்துகொள்ள முடியாததெல்லாம் அற்புதம் அல்ல. நாம் புரிந்துகொள்ள முடியாதவை ஏராளமாக உண்டு. அவைகளெல்லாம், இயற்கைச் சட்டத்தின்படியோ அல்லது சில திட்டத்தின் மூலமோ, அல்லது மனிதனின் முயற்சியால் ஆன கண்டுபிடிப்புகளின்படியோ நடத்து கொண்டிருக்கிறது.

புதிய ஏற்பாட்டில், கிறிஸ்துவும், அப்போஸ்தலர்களும், அவர்கள் யார் யார் மேல் கைகளை வைத்தார்களோ அவர்கள் மட்டுமே அற்புதங்களைச் செய்யக்கூடியவர்களாக இருந்தனர். நாம் ஏற்கனவே குறிப்பிட்டப்படி, விசுவாசிகளை உண்டாக்குவதற்காக அவர்கள் அப்படிச் செய்தனர். இது புதிய ஏற்பாடு எழுத்து வடிவில் கிடைக்கப்படுவதற்கு முன்பு நடைபெற்றது. புதிய ஏற்பாடு பூரணமாக எழுதப்பட்டு மனிதருக்குக் கிடைத்தபின், அற்புத யுகம் முடிவுற்றது. நமது இருதயத்தில் விசுவாசத்தை உருவாக்க இனி நமக்கு அற்புதங்கள் தேவையில்லை. ஆதலால், *விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்* என பவுல் கூறினார் [ரோமர். 10:17]. கர்த்தர் தமது வசனத்தில் கூறியிருப்பதை நீங்கள் நம்பாவிட்டால், நீங்கள் எந்தவொரு அற்புதத்தைக் கண்டாலும் நம்பப் போவதில்லை.

கர்த்தர் நேரிடையாகவோ அல்லது அவருடைய ஊழியர்களைக் கொண்டோ அற்புதங்களைச் செய்ய முடியாதென்பது இங்கே பிரச்சினை அல்ல. அவர் தனது வல்லமையை இழந்து போகவுமில்லை. அவருடைய பிள்ளைகள் வல்லமையற்றவர்களாகவும் இல்லை. கர்த்தரும் அவரைப் பின்பற்றுவோரும் எப்பொழுதும் வல்லமையுள்ளவர்களாகவே உள்ளனர். ஆனால், கர்த்தர் ஒரு வித்தியாசமான வழியை, சொல்லப்போனால் , ஒரு மேலான வழியை ,தனது காரியத்தை நிறைவேற்றத் தெரிந்தெடுத்துள்ளார். அற்புதங்கள், அடையாளங்கள், அதிசயமான செயல்கள் ஆகிய அனைத்தும் தற்காலிகமானதாக மட்டுமே இருந்தன அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே கொடுக்கப்பட்டது. இன்று நாம் அவற்றைச் சார்ந்திருக்கத் தேவையில்லை. ஏனெனில், இப்போது நாம் படிக்கவும், கற்றுக் கொள்ளவும், விசுவாசிக்கவும், கீழ்ப்படியவும் தேவனுடைய வார்த்தை நமக்குக் கிடைத்துள்ளது. நாம் தேவனுடைய வார்த்தையின்படி செய்யும்போது கர்த்தர் நம்மை இரட்சிக்கிறார். நம்மை ஆசீர்வதிக்கிறார். இதற்கு மேல் நமக்கு வேறு என்ன வேண்டும்!

★

பெண்கள் பகுதி

# உள்ளத்திலிருந்து உருவங்கள்

Sis. ரேச்சல் இராஜநாயகம்

**கி**றிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளுக்கு வாழ்த்துக்கள். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை நம் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென் தேவனுடைய அனந்த ஞானத்தின் வெளிப்பாடு குடும்பம். இரண்டாவது சபை குடும்பம் ஏனோ தேவனுடைய பார்வையில் முதலிடத்தைப் பெற்றுவிட்டது. குடும்பம் முழுமையாக தாய் அவசியப் படுகிறாள். பலுகிப் பெருக தாய் அவசியம். ஒன்றைப் புதிதாக உண்டாக்குவதில் தேவனுக் கடுத்த இடத்தை தாய் பிடித்துக் கொள்கிறாள். அந்த சிலாக்கியம் தேவனால்

இந்த படைப்பை நாம் யாரும் அற்பமாய் எண்ணக் கூடாது. ஏதோ வருடத்தில் ஒரு நாள் Mothers day என்று மே மாதம் இரண்டாம் ஞாயிறு கொண்டாடிவிட்டு போகி றார்கள். உலகத்தார் தாய் மரித்துப் போயிருந்தால் அனாதை தாய் ஒருத்திக்கு வேண்டிய பொருள்களை வாங்கிக் கொடுத்து விட்டு தங்களுக்குப் பொய் சமாதானத்தை தேடிக்கொள்கி றார்கள். இவ்வுளவுதானா தாய்க்கு மதிப்பு?

வேதத்தால் பேசப்படுகின்ற சிறந்த பாத்திரம் பெண். அதாவது தாய். ஏறக்குறைய 300 தடவை தாய் என்ற வார்த்தை வேதாகமத்தில் இடம் பெற்றுள்ளது. பழைய ஏற்பாட்டில் பார்த்தால் சாராள், யோகபாத், அன்னாள், ரூத் போன்றவர்கள் மிகவும் மதிக்கப்படத்தக்க தாய்களாக திகழ்ந்தனர். இந்த மாபெரும் தாய்களின் வாழ்க்கைச் சரித்தரங்களை நாம் வாசிக்கும்போது அவர்கள் கர்த்தருடைய பிள்ளைகளை உருவாக்குவதற்கு தங்கள் பங்கை எப்படி ஆற்றி யிருக்கிறார்கள் என்பதை நாம் உணரமுடியும். இன்றும் பார்த்தால் பழைய ஏற்பாட்டின் சரித்திரத்தில் யூதாவை ஆண்ட இராஜாக்களின் தாய் மார்களைப் பார்த்தால் அதுவும் வியப்பூட்டுகிறதாய் இருக்கிறது. சில இராஜாக்களைப் பற்றி பேசும்போது இவன் கர்த்தருடைய பார்வைக்கு செம்மையானதைச் செய்தான் என்று சொல்லப்பட்டிருக்கும். சிலர் தேவனுடைய கற்பனைகளை மீறி வேறே தேவர்களை சேவித்து வந்தான் என்று சொல்லப்பட்டிருக்கும். கூடவே அவர்கள் தாயின் பெயர் இடம் பெற்றிருக்கும்.

ஆம் அர்த்தத்தோடு தான்அவைகள் சொல்லப்பட்டி ருக்கிறது. இராஜாவாக இருக்கட்டும், எந்தக் குழந்தையும் நல்லதா, கெட்டதா என்பது தாயின் தாக்கத்தினால் தான் அமைகிறது. எசேக்கியேல் தீர்க்கதரிசி, இதோ பழமொழி சொல்லுகிறவர்கள் எல்லாரும் தாயைப்போல மகள் என்று உன்னைக் குறித்துப் பழமொழி சொல்வார்கள் [எசே.16:4] என்கிறார்.

புதிய ஏற்பாட்டில் மிகப் பிரபலமான எல்லோராலும் அறியப்பட்ட ஓர் இளைய பிரசங்கியார் இருந்தார். அவர் பெயர் தீமோத்தேயு. அப்போஸ்தலன் பவுல் அவரைப்பற்றி கூறும்போது இதினிமித்தமாக, எனக்குப் பிரியமும், கர்த்தருக்குள் உண்மையுமுள்ள என் குமாரனாகிய தீமோத்தேயுவை உங்களிடத்தில் அனுப்பி னேன். நான் எங்கே எந்தச் சபையிலும் போதித்து வருகிறப் பிரகாரம் கிறிஸ்துவுக் குள்ளான என் நடக்கைகளை அவன் உங்களுக்கு ஞாபகப்படுத்துவான் [1கொரி.4:17] என்கிறார். மேலும் தீமோத்தேயு உங்களிடத்திற்கு வந்தானேயாகில் அவன் உங்களிடத்தில் பயமில்லாமலிருக்கப் பாருங்கள்; என்னைப் போல அவனும் கர்த்தருடைய கிரியையை நடப்பிக்கிறானே [1கொரி.16:10] என்று நற்சாட்சி கொடுக்கிறார்.

மேலும், பிலிப்பி சபையாருக்கு பவுலடியார் எழுதும்போது, அன்றியும், நானும் உங்கள் செய்திகளை அறிந்து மனத்தேறுதல் அமையும்படிக்குச் சீக்கிரமாய் தீமோத்தேயுவை உங்களி டத்தில் அனுப்பலாமென்று கர்த்தராகிய இயேசுவுக்குள் நம்பியிருக்கிறேன். அதேனென்றால் உங்கள் காரியங்களை உண்மையாய் விசாரிக்கிறதற்கு என்னைப் போல மனதுள்ளவன் அவனையன்றி வேறொரு வனும் என்னிடத்திலில்லை. மற்றவர்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்கு ரியவைகளைத் தேடாமல் தங்களுக்குரியவைகளையே தேடுகிறார்கள். தகப்பனுக்கு பிள்ளை ஊழியஞ் செய்வது போல அவன் என்னுடனே கூட சுவிசேஷத்தினிமித்தம் ஊழியஞ்செய்தானென்று அவனுடைய உத்தமகுணத்தை அறிந்திருக்கிறீர்கள் [பிலி.2:19-22]. என்கிறார். எவ்வளவு மாபெரும் சாட்சி. இன்றைக்கு ஊழியம் செய்கி றேன் என்று சொல்லும் இளைய தலைமுறையினரின் சாட்சி எப்படி இருக்கிறது. தங்களுக்குள்ளானவை களையே தேடுகின்ற இளைஞர்கள் தான் நிறைந்து காணப்படுகிறார்கள். சபை என்றால் என்ன? ஐக்கியம் கொடுத்தல் சபைக்கான நேரம் ஒதுக்குதல் வேலை செய்தல் எதுவுமே படிக்காத இளம் ஊழியர்களைத் தான் நாம் பெரும்பாலும் காணமுடிகிறது. தீமோத்தேயுவைப் போன்ற மனதை உடையவர்களை தேவன் எழுப்ப ஜெபிப்போம்.

எப்படி தீமோத் தேயுவால் அப்படி இருக்க முடிந்தது. மீண்டும் பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும் கடிதத்தில் அதற்கான பதிலை

விளக்குகிறார். அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக் குள்ளும், உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது. அது உனக்குள்ளும் நிலைத்திருக் கிறதென்று நிச்சயத்தி ருக்கிறேன்(2தீமோ.1:5). மேலும், சுவிசேஷத்தினி மித்தம் என்னுடனே கூட ஊழியம் செய்தான் (பிலி.2:99-22) என்றெல்லாம் கூறும்போது தீமோத்தேயுவின் உண்மை யான இளமைக்கால ஊழியம் பற்றிய இரகசியம் நமக்குப் புரிகிறது.

லோவிசாளும் ஐனிக்கேயாளும் இல்லாதி ருந்தால்அங்கே தீமோத் தேயுவே இல்லை. அவன் குழந்தையாய் அவர்கள் கரங்களிலே தவழும்போதே இந்த தேவ பக்தியுள்ள ஸ்திரீகள் தேவனுடைய வார்த்தை களைக் கற்றுக்கொடுத்திருக் கிறார்கள். அவர்களுக்கிருந்த மாபெரும் விசுவாசத்தை தங்கள் மகனுக்கு கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். அதை ஏற்று வளர்ந்த மகன் பவுலை சந்தித்து அவர் உபதேசங்களை கேளிவிப்பட்டவுடன் அவை களால் ஈர்ப்புண்டு தான் கற்றதை பிறருடன் பகிர்ந்து இப்படி பிரசங்கியானான்.

சுவிசேஷத்தை அறிவிக்கும் பிரசங்கி யார்களை உருவாக்க இன்றைக்கு அநேக லோவி சாள்களும், ஐனிக் கேயாள்களும் தேவை. வேதாகமக கல்லூரிகளிலோ, பல்கலைக்கழகங்களிலோ ஒருவன் இயேசுவின் பிரதான கட்டளையை சுமந்து செல்வதற்கான ஏவுதலை முழுமையாகச் சொல்லிக் கொடுப்பதில்லை அல்லது ஊட்டுவதில்லை. நற்செய்தி என்றழைக்கப்படும் சுவி சேஷத்தைப் பறைசாற்ற ஊக்குவிக்கும் பொறுப்பான இடம் குடும்பம்தான்.

நமது இரட்சகராகிய இயேசுவின் வாழ்வில் மிகவும் உருக்கமான காட்சிகளில் ஒன்றை நாம் தவறிவிடக் கூடாது. சிலுவையிலே அவர் தொங்கிக் கொண்டிருந்த போது தன் தாயை நினைத்துப் பார்க்கிறார். தாய் தன்னை தேற்ற வேண்டும் என்று எதிர்பார்க்காமல் எல்லா வலியையும், வேதனையையும் தாங்கிக்கொண்டு மரணத்தின் இருட்டில் உலகத்தின் எல்லோருடைய பாவங் களையும் தன் தோளில் சுமந்தவராய் தன் தாயின் நலனை நினைத்துப் பார்க்கிறார். தன்னால் நேசிக்கப்பட்ட சீஷனாகிய யோவானிடம் தன் தாய்க்கு ஒரு தங்குமிடம் வேண்டும் என்று நினைத்து அருகில் நின்ற சீஷனையும் பார்த்து தன் தாயை அன்போடும், கருணை யோடும் பார்த்துக் கொள்வான் என்ற நினைப்புடன் தன் தாயை பார்த்து அதோ உன் மகன் என்றும் கூறினார். அந்நேர முதல் அந்தச் சீஷன் அவளைத் தன்னிடமாய் ஏற்றுக் கொண்டான்(யோவான்.19:27) இயேசு இந்த அற்புதமான பாடத்தை நமக்கு கற்றுக் கொடுத்திருக்கிறார். அம்மா எனக்கு என்ன செய்கிறார்கள் என்று கேட்காமல் நான் என் அம்மாவுக்கு என்ன செய்தேன் என்று கேட்க வேண்டும்.

ஆகையால் அன்பு சகோதரிகளே! தாயின் பொறுப்புணர்ந்து நாம் ஒவ்வொருவரும் செயல்படுவோம். ஆமென்!

வாலிபர் பகுதி

# தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் பார்

சகோ. பென்னி மார்ட்டீன்

பிரியமான வாலிப உள்ளங்களுக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். உங்களை இக்கட்டுரையின் வாயிலாக மறுபடியும் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். அன்பார்ந்தவர்களே! பொதுவான அளவில் பார்க்கும்போது கிறிஸ்தவர்கள் மத்தியில் தேவன் அன்பானவர். அவர் நம் தவறுகளை பொறுத்துக் கொள்வார். தவறுகளைக் கண்டுகொள்ள மாட்டார். அவர் தயவுள்ளவர் அவருடைய தயவுகளுக்கு எல்லையே இல்லை என்றெல்லாம் சொல்லிக்கொள்ளுகின்றனர். அவர்கள் சொல்வதில் உண்மையும் உள்ளது. ஆனால், தேவன் கண்டிப்பானவர் என்னும் தேவனுடைய மறுபக்கத்தை மறைத்து விடுகிறார்கள் அல்லது ஏற்றுக்கொள்ள மறுத்துவிடுகிறார்கள். பலர் துளி அளவும் தேவபயமில்லாமல் துணிகரமான பாவங்களைச் செய்வதற்கு இத்தகைய தவறான எண்ணங்களே ஆதாரமாக இருக்கின்றன. தேவன் அன்புள்ளவர், தயவுள்ளவர் என்பதில் எந்த சந்தேகமுமில்லை. ஆனால், அவர் கண்டிப்பானவர் என்பதை புரிந்து கொள்வது நம் ஆவிக்குரிய வாழ்க்கை மேம்பட உதவியாயிருக்கும். ரோமர் பதினோறாம் அதிகாரத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் இஸ்ரவேலர்கள் தேவனால் நிராகரிக்கப்பட்டதைப் பற்றி எழுதுகிறார். ஆனால், இதைப் பற்றி மேலும் அவர் சொல்லும்போது, தேவன் இஸ்ரவேலை நிராகரித்தது முதலும் முடிவுமல்ல என்று தெளிவுபடுத்துகிறார். பவுல் நிராகரிக்கப்பட்ட இஸ்ரவேலர்களை மரத்திலிருந்து முறிக்கப்பட்ட கிளைகளுக்கு ஒப்பாகப் பேசுகிறார். அவர் பின்பு அதற்குப் பதிலாக புறஜாதிகள் தேவனுடைய மரத்தில் ஒட்டவைக்கப்படுவதைப் பற்றிப் பேசுகிறார். ரோமர் 11:22 ல் இதைப்பற்றி தெளிவாகச் சொல்லி இருக்கிறார். *ஆகையால் தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் பார்; விழுந்தவர்களிடத்திலே கண்டிப்பையும் உன்னிடத்திலே தயவையும் காண்பித்தார்; அந்தத் தயவிலே நிலைத்திருப்பாயானால் உனக்குத் தயவு கிடைக்கும்; நிலைத்திராவிட்டால் நீயும் வெட்டுண்டு போவாய்.*

### தேவனுடைய தயவு

தேவனுடைய தயவு என்பது வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற தேவனுடைய பண்புகளுள் ஒன்றாகும். ஆனால், இப்பண்பு வேதாகமத்தில் தேவனுடைய மற்ற

விட அதிகமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவருடைய தயவு அபரிதமானது, அலாதியானது அது சங்கீதக்காரனாகிய தாவீதை *மனுஷனை நீர் நினைக்கிறதற்கும் மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம்* எனக்கேட்க வைத்தது [சங்கீதம்8:4]. அனுதினமும் தேவன் தமக்கு அருளுகின்ற எண்ணற்ற சரீரப்பிரகாரமான ஆசீர்வாதங்கள் எந்த அளவுக்கு பெரிதானதோ அதைவிடப் பெரிது இயேசு கிறிஸ்து மூலமாக தேவனிடத்திலிருந்து வரும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள். *நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்* [எபேசியர்1:3].

நிச்சயமாகவே தேவன் நமக்களித்த மிகப்பெரிய ஆவிக்குரிய ஆசீர்வாதம் வேதாகமத்தின் தங்கவசனம் என்றழைக்கப்படுகிற யோவான் 3:16ல் இடம் பெற்றிருக்கிறது. *தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.* தேவ தயவின் இந்த வெளிப்பாடு இல்லாதிருந்தால் நம் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க நோக்கமோ அல்லது நம்பிக்கையோ இருந்திருக்காது. ஒரு காட்டு மிருகத்தின் வாழ்க்கைக்கு எந்த அளவு அர்த்தம் இருக்குமோ அதைவிடப் பெரிய அர்த்தம் ஒன்றும் நம் வாழ்க்கைக்கு இருந்திருக்காது. தேவனுடைய தயவுக்கும் அவருடைய மன்னிக்கும் மனதிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அவருடைய மன்னிப்பின் மூலமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிற அவருடைய தயவினால் மட்டுமே நம் பாவங்கள் காரணமாக தேவனிடத்திலிருந்து பிரியும் பரிவை நம்மால் தடுக்க முடிகிறது.

### தேவனுடைய கண்டிப்பு

தேவனுடைய தயவைப் பற்றி எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசிக்கொண்டே இருக்கலாம். அது நம் எல்லோருடைய விருப்பமும் கூட. ஆனால், இங்கே தேவனுடைய கண்டிப்பைப்பற்றி பேசுவது தேவ பயமுள்ள வாழ்க்கை வாழ பிரயோஜனமாயிருக்கும். சிலர், தேவனால் எப்படி தயவாகவும் கண்டிப்பாகவும் இருக்க முடியும். இது முரண்பாடாக இருக்கிறதே என்று சொல்கிறார்கள்.

ஆனால், சிலருக்கு முரண்பாடுபோல் தோன்றுகிற தேவனுடைய பண்புகள் தொன்றுதொட்டு தேவன் மனித இனத்தோடு இடைபட்டவிதத்தைப் பார்த்தால் நமக்கு மிக எளிதாக விளங்கும் தேவன் தமது மிகுந்த கரத்தினால்தான் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் ஓர் அருமையான இடத்தை ஆயத்தமாக்கினார். ஆனால், ஆரம்பத்திலிருந்தே அவர்களுக்கான ஆசீர்வாதங்களெல்லாம் நிபந்தனைக்குட்பட்டது என்று தம்முடைய நிலைய தேவன் தெளிவுபடுத்திவிட்டார். அதாவது, தம்முடைய சித்தத்திற்கு கீழ்ப்படிந்தால் ஆசீர்வாதங்கள் கிடைக்கும் என்ற நிபந்தனையை விதித்தார். அதனால்தான் அவர்கள் கீழ்ப்படியாதபோது தேவன் அவர்களை ஏதேன் தோட்டத்தை விட்டு துரத்திவிட்டார். தேவன் வாக்குத்தத்தம் பண்ணினார், அதை அவர் நிறைவேற்றினார்.

அதேபோல் தேவன் தம்முடைய மனுஷனாகிய நோவாவை ஜீவனை இரட்சிக்கும் செய்தியுடன் அனுப்பினார். 120 வருடங்கள் நோவா பிரசங்கம் பண்ணினார். துரதிஷ்டவசமாக அவருடைய பிரசங்கத்தை ஜனங்கள் நிராகரித்து அவரைப் பரியாசம் செய்தார்கள். தேவன் ஓர் வாக்குத்தத்தை செய்தார். மறுபடியும் அவர் தமது வாக்குத்தத்தை நிறைவேற்றினார்! ஜனங்கள் தேவனுடைய தயவைக் கண்டுகொள்ளாமல் அவருடைய தயவை நிராகரித்தபோது, அவருடைய கண்டிப்பு தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

**ஏன் தேவன் கண்டிப்பாக இருக்கிறார்?**

இதைக்குறித்து நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறோம். இன்னும் நாம் சற்று விவரமாகப் பார்ப்போம். பெரும்பாலானவர்கள் ஒரு முதலாளி, தொழிலாளி வேலை செய்யாத போது சம்பளம் கொடுப்பதில்லை என்பதைப் புரிந்து கொள்கிறார்கள். செய்யப்படும் சேவைகளுக்குத்தான் கூலிகள் கொடுக்கப்படுகின்றன என்பதை நாம் புரிந்து வைத்திருக்கின்றோம். இதே விதி தேவனுடைய காரியங்களுக்கும் பொருந்தும். அதாவது, தேவன் தமக்கு உண்மையாக சேவை செய்யும்போது கிடைக்கும் நன்மைகளை முன் கூட்டியே அறிவித்துவிட்டார். ஆனால், தம்முடைய கட்டளைகளுக்கு மனிதன் எந்த அளவு கீழ்ப்படிகிறான் என்பதை பொருத்துத்தான் அந்த நன்மைகள் கிடைக்குமென்பதையும் முன்கூட்டியே அறிவித்துவிட்டார். இத்தனையையும் அறிவித்த பிறகு, மனிதன் தேவனுடைய பிரமாணங்களை மீறினால் அப்போது தேவன் தம்முடைய கண்டிப்பை வெளிப்படுத்தினால் அதில் என்ன தவறு இருக்கிறது? அது நியாயந்தானே? மனிதன் தேவனுடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படியாமலிருந்து அவருடைய வார்த்தைகளுக்கு உண்மையில்லாமல் இருந்தால் கூட நம் அன்புள்ள தேவன் மனிதன் உண்மையாகவே மனந்திரும்பி தேவனிடத்திற்குத் திரும்பும்போது, அவர் நம்மை மன்னித்து ஏற்றுக்கொள்கிறார். நாம் எப்போதும் தேவனுடைய தயவை பேதுருவின் ஆறுதலான வார்த்தைகளால் நினைவு கூர வேண்டும். ***தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தை குறித்து தாமதமாயிராமல் ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லோரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்*** [2பேதுரு3:9].

பிரியமான வாலிபர்களே! தேவன் அன்பானவர்தான் அவருடைய அன்புக்கு எல்லையே இல்லை. அதன் பொருள் அவர் நம் தவறுகளைப் பொறுத்துக் கொள்வார். தவறுகளை கண்டுகொள்ளமாட்டார் என்பதல்ல. அதேபோல், அவர் தயவுள்ளவர்தான் அவருடைய தயவுக்கு எல்லையே இல்லை. இதன் பொருள் நாம் அவருக்கு விரோதமாகப் பாவஞ்செய்யும்போது அவர் நமக்கு தயவு காட்டுவார் என்பதால் இன்றைய நாட்களில் பெரும்பாலான வாலிபர்கள் தேவன் தண்டிப்பதெல்லாம் சும்மா என்றெல்லாம் பரியாசம் செய்து பரிதாபத்திற்குரியவர் களாகிவிட்டார்கள். வாழ்க்கை வாழ்வதற்கே என்னும் தத்துவத்தை சத்தமாகச் சொல்லி, தாறுமாறாக வாழ்ந்து வாழ்க்கை தேடலில் தங்களை தொலைத்து விடுகிறார்கள். வாலிப சகோதர சகோதரிகள் எல்லோரும் தேவன் தயவுள்ளவர் மாத்திரமல்ல கண்டிப்பானவர் என்பதை கண்டிப்பாகப் புரிந்துகொள்ள வேண்டும். ★

சிறுவர் பகுதி

# காணாமல் போன ஆடு...

Bro. ஏபில் நாயகம்

எனக்குப் பிரியமான பிள்ளைகளே! உங்கள் யாவருக்கும் இறைமகன் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். அனைவரும் நலமாக இருப்பீர்கள் என விசுவாசிக்கிறேன். நானும் நலமாக உள்ளேன். அன்புப் பிள்ளைகளே, உங்களுக்குப் பிடித்த ஒரு விளையாட்டுப் பொருளை நீங்கள் தொலைத்துவிட்டால் என்ன செய்வீர்கள்? மிகவும் கவலைப்படுவீர்கள் தானே? அதேசமயம் அதைத் தேடி கண்டுபிடித்து விட்டால்.. அப்பப்பா.. அதிக சந்தோஷம் அடைவீர்கள். அப்படித் தானே?! சரி, இதை அப்படியே மனதில் வைத்துக் கொண்டு, இந்த மாதத்திற்கான வேதபகுதியை வாசியுங்கள். சீக்கிரம் வாசியுங்கள் லூக். 15:1 - 7 வரை வாசித்துவிட்டீர்களா?

இயேசுவின் வார்த்தைகளைக் கேட்பதற்காகத் திரளான ஜனங்கள் அவரைப் பின் தொடர்ந்து வந்தார்கள். அந்த கூட்டத்தில் “ ஆயக்காரரும், பாவிகளும் ” மற்றும் “ பரிசேயரும், வேதபாரகரும் ” தங்களை நீதிமான்கள் என்று எண்ணிக் கொண்டு, பாவிகளுக்கு விலகி இருந்தார்கள். அந்தச் சமயத்தில் நம்முடைய இயேசு பாவிகளோடு பழகவும், அவர்களோடு சாப்பிடவும் செய்தார். இதைப் பார்த்த பரிசேயரும் வேதபாரகரும் “என்னடா, இவர் பாவிகளோடு சாப்பிடுகிறாரே ” என்று தங்களுக்குள்ளே சொல்லிக் கொண்டு முணுமுணுத்தார்கள். (வ. 1, 2 ).

அதை அறிந்த இயேசு, அவர்களுக்கு ஒரு பாடம் புகட்ட முயன்றார், தேவனைப் பற்றியும், தன்னைப் பற்றியும் அவர்கள் தவறான எண்ணம் கொண்டிருக்கிறார்கள் என்று புரிந்து கொண்டு, ஓர் உவமையை அவர்களுக்குச் சொன்னார்.

அந்த உவமை என்னவென்றால், ஒரு மனிதனுக்கு 100 ஆடுகள் இருந்து, அவைகளில் ஒன்று தொலைந்து போனால், காணாமல் போன அந்த ஒரு ஆட்டைக் கண்டுபிடிக்கும் வரைக்கும் அவன் தேடுவானல்லவா? என்று முணுமுணுத்தவர்களைப் பார்த்துக் கேட்டார். அவர்களும் “ ஆம் ” என்று தான் சொல்லி இருப்பார்கள். அப்படி தேடி கண்டுபிடித்து விட்டால்

அவன் மிகவும் சந்தோஷப் படுவான் என்று கூறினார். சந்தோஷத்தின் மிகுதியால் அதைத் தன் தோளில் சுமந்து அந்த சந்தோஷத்தைத் தன் சிநேகிதர்களிடத்திலும் அயலகத்தாரிடத்திலும் பகிர்ந்து கொள்வான் என்று சொன்னார்.

வ – 7ல் – “ அதுபோல, மனந்திரும்ப அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக் குறித்துச் சந்தோஷம் உண்டாகிறதைப் பார்க்கிலும் மனந்திரும்புகிற “ ஒரே ” பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் ” என்று சொன்னார்.

பிள்ளைகளே! வேதாகமம் நம்மை சில சமயம் நாம் ஆடுகளைப் போல தேவனிடத்திலிருந்து வழி தவறிப் போகிறோம் என்று கூறுகிறது. அப்படி வழி தவறிப் பிசாசின் வழியில் செல்வது தேவனுக்கு மிகுந்த கவலையை அளிக்கிறது. ஆனால் அவர் நம்மை விட்டுவிடுவதில்லை. நம்மைத் தேடி எப்படியாவது கண்டு பிடிக்க முயற்சிக்கிறார். தன் கரத்தோடு பிடித்துக் கொள்ள அவர் விரும்புகிறார். காணாமல் போனவர்களைக் கண்டுபிடித்து சேர்த்துக் கொள்ளத்தான் தன் சொந்த மகனாகிய இயேசுவை அனுப்பினார். பாருங்கள் நம் தேவனின் அன்பை!! அந்த உவமையில் காணாமல் போன ஆடு கிடைத்தவுடன் “ இயேசு அதைத் தன் தோள்களின் மீது ” சுமக்கிறார்.

நம் இயேசு எவ்வளவு அன்பானவர் பாருங்கள்! இந்த இயேசுவை நாம் அதிகம் அதிகமாக அறிந்து, அவருக்குப் பிரியமாய் வாழ்ந்தால், நம்மையும் தோளில் சுமந்து பாதுகாப்பாகவும், ஆசீர்வாதமாகவும் வழி நடத்துவார். இந்த உண்மையை நம் சிறு பிராயத்திலேயே கற்றுக் கொள்வோம். சரியா? ★

## வளரும் கிறிஸ்தவனின் குணாதிசயங்கள்

- **வளரும் கிறிஸ்தவன்** *எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுவான் ( ரோமர் 12 : 17 )*
- **வளரும் கிறிஸ்தவன்** *எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருப்பான் (ரோமர் 12 : 18)*
- **வளரும் கிறிஸ்தவன்** *பழிவாங்குதலில் ஈடுபடமாட்டான் ( ரோமர் 12 : 19 )*
- **வளரும் கிறிஸ்தவன்** *தீமைக்குப் பதிலாக நன்மையையே செய்வான். (ரோமர் 12 : 21 )*

# வேத வினா போட்டி

பதிலளிப்போர் கவனத்திற்கு

**கீழ்க்கண்ட கேள்விகளுக்கு வேதவசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் அடுத்த மாதம் 10 ம் தேதிக்குள் திருமறை ஆசான் முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் அலைபேசி எண்ணையும் தவறாமல் எழுதி அனுப்பவும். (இதற்கான விடை ஜூலை மாத இதழில்)**

(உபாகமத்தில் தேடிக் கண்டுபிடியுங்கள்)

1. ஒரு காரியத்தை உறுதிப்படுத்த எத்தனை சாட்சிகள் தேவை?
2. யாருக்குப் பங்கும் சுதந்திரமும் இல்லை?
3. பிறனுடைய விளைச்சலில் எதை இடலாகாது?
4. எதை வாய் கட்டக்கூடாது?
5. நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளை எப்படி எழுத வேண்டும்?
6. சந்தேகத்தில் எது ஊசலாடும்?
7. பிதாக்களின் தேவனை ஏன் பற்றிக்கொள்ள வேண்டும்?
8. வழியை விட்டு விலகினால் கடைசி நாளில் என்ன நேரிடும்?
9. தேவனுடைய சுதந்திரவீதம் யார்?
10. கர்த்தரை முகமுகமாய் அறிந்த தீர்க்கதரிசி யார்?

## மே மாத வினாக்களுக்கான விடைகள்

1. தங்களைக் கெடுத்துக் கொண்டார்கள் (9:12)
2. ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள் (7:14)
3. உடைத்துப் போட்டார் (10:2)
4. எழுது பேர் (10:22)
5. பலத்த கையும், ஓங்கிய புயமும் (11:2)
6. இரத்தத்தை (12:16)
7. ஏழாம் வருஷத்தின் முடிவில் (15:1)
8. உன்னை ஆசீர்வதிப்பார் (15:18)
9. மூன்று தரம் (16:16)
10. வெறுங்கையோடே (16:17).

## சரியான பதில் எழுதியவர்களில் சிலர்

| | |
|---|---|
| 1. N. இந்திரா ஜெபக்கனி | - தூத்துக்குடி |
| 2. M. செல்வம் | - கோவை |
| 3. R. பாக்கியம், ராஜேஷ் | - சென்னை |
| 4. S. சாந்தகுமாரி | - நாசரேத் |
| 5. N. ஜெபத்தாய் | - நாசரேத் |
| 6. செல்வமணி குணசேகரன் | - சென்னை |
| 7. S. ஜோதி சுரேஷ் | - திருச்சி |
| 8. A. பிலோமினா | - கோவை |
| 9. R. பாரதி | - கோபி |
| 10. K. ஜெயசிங் | - சென்னை |
| 11. K. இம்மானுவேல், ஈஸ்வரி | - பவானி |
| 12. J. ஜெமீலா செல்லையா | - நெல்லை |
| 13. S. ஜெயராஜ் | - கோவை |
| 14. ஜெயமணி ஜெயபாண்டியன் | - கடலூர் |
| 15. J. ஜான்சி | - ஆனைமலை |
| 16. மரகதம் திரவியம் | - தேனி |
| 17. G. சாமுவேல் மோகன்தாஸ் | - சென்னை |
| 18. V.C. ரூபவல்யா | - நாசரேத் |
| 19. T. சத்தியசீலன் | - கோவில் பட்டி |
| 20. G. பாக்கியம் சம்பூரணம் | - ஈரோடு |
| 21. J. மாலதி ஜெயக்குமார் | - மூலனூர் |
| 22. J. அபினேஷ் | - மூலனூர் |
| 23. K.S. மாணிக்கவாசகம் | - திருச்சி |
| 24. S. ஆதாள் | - கோவில்பட்டி |
| 25. V.S.S. பால்ராஜ் | - மதுரை |
| 26. மாலதி ஜெயசெல்வம் | - சீர்காழி |
| 27. சாந்தகுமாரி | - நாசரேத் |
| 28. ஜெனி | - கோவை |
| 29. ஜெயஷீலா | - காரைக்கால் |
| 30. தெபோராஜ் ஸ்டீபன் | - சேலம் |
| 31.அருள்ராஜ் | - சென்னை |

## வேதாகம கேள்வி - பதில்

**கேள்வி:** ஆராதனை என்பது தேவனை மகிமைப்படுத்துவதா அல்லது மனிதனைப் பிரியப்படுத்துவதா?

**பதில்:** உண்மையான ஆராதனை என்பது மனிதர்களைப் பிரியப்படுத்தும் பிடியான ஒரு செயல் அல்ல. மாறாக, தேவனை மகிமைப்படுத்தும்படியான துதியாக இருக்கிறது. அநேகர் இந்த உண்மையை மறந்து விட்டது போல் தெரிகிறது. சபைகள் தங்கள் நிகழ்ச்சிகளில், இசை விருந்துகளில், நாடகங்களில் ஒன்றை விட ஒன்று சிறப்பாகச் செய்ய முயற்சிக்கின்றன. அவைகளின் நோக்கம் தேவனைத் துதிப்பதை விட மனிதனைப் பிரியப்படுத்துவதாக இருப்பது போல் தெரிகிறது.

தேவன் இந்த பூமிக்குரிய ஆலயங்களில் வாசம் செய்வதில்லை. மனிதனுடைய பக்தி நிகழ்ச்சிகள் எவ்வளவு அழகாக, பரவசமூட்டுவதாக அல்லது தூண்டுதல் உண்டாக்குவதாக இருந்தாலும் சரி, அதன் மூலம் தேவன் ஆராதிக்கப்படுவதில்லை. தேவன் தேவனாயிருக்கிறார். அவர் இப்பூமிக்குரிய வெற்றுச் சடங்குகளை அல்ல, ஆவிக்குரிய ஆராதனையையே விரும்புகிறார். ஆராதனையானது மனிதனை நோக்கி அல்ல தேவனை நோக்கி ஏறெடுக்கப்பட வேண்டும்.

உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம் பண்ணுகிறதில்லை; எல்லாருக்கும் ஜீவனையும்; சுவாசத்தையும், சகலத்தையும் கொடுக்கிற அவர், தமக்கு யாதொன்று தேவையானது போல, மனுஷர் கைகளால் பணிவிடை கொள்ளுகிறதுமில்லை (அப். 17:24,25).

உண்மையான ஆராதனை உள்ளார்ந்த மனிதனை ஈடுபடுத்துகிறது. அதாவது, விருப்பமுள்ள ஆராதனையைப் புரிந்து கொள்ளுகிற மனதை உணர்கிற இருதயத்தை அது ஈடுபடுத்துகிறது. உண்மையான ஆராதனைக்கு மனிதனுடைய புதுமைச் செயல்களோ அல்லது மனிதத் தூண்டுதலோ மாற்றாக அமையாது. இயேசு இவ்விதமாகச் சொன்னார். அன்றியும் நீ ஜெபம் பண்ணும்போது மாயக்காரரைப் போலிருக்க வேண்டும். மனுஷர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும், வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம்பண்ண விரும்புகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (மத்தேயு 6:5). ★

# தெளிந்த புத்தியும் – பிசாசும்

Bro. பாண்டியன்

**கி**றிஸ்து இயேசுவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துதல் உண்டாவதாக. பேதுருவின் முதலாம் நிருபம் 5–ம் அதிகாரத்தில் சொல்லும்போது நீங்கள் *தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள்'' ஏனெனில் உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் எவனை விழுங்கலாமோ என்று வகைத் தேடி சுற்றித்திரிகிறான்* என்று எச்சரிக்கின்றார். விசுவாசிகளின் புத்தி வேதவசனங்களால் சீர் பெறுகிறது. அதில் குறைவு ஏற்படும்போது அதாவது வேத வாசிப்பு , ஜெபம், சபைக்கூடுதல் போன்றவற்றில் நாம் ஒழுங்கில்லாது இருக்கும்போது பிசாசு நம் புத்தியைக் கலங்கப் பண்ணுகிறான். நாம் வேத வசனங்களைக் கேட்டு அதின்படி நடக்க புத்தியில் தீர்மானிக்கின்றோம். ஆனால், உபத்திரவங்கள், உல்லாசங்கள் போன்றவற்றால் அது தடைபட்டு தேவசித்தம் நம் வாழ்வில் நிறைவேற முடியாமல் போகிறது. அதினால் நாம் தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருக்க பேதுரு அறிவுறுத்துகிறார்.

மனிதனுக்கு தேவசாயல் கொடுக்கப்பட்டது. தேவக்கட்டளையை அவன் மீறினதினால் அதை இழந்து போனான். இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷக்குமாரன் இவ்வுலகில் வந்தார். அப்படித்தான் நாமெல்லாரும் கிருபையினால் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டோம். இரட்சிக்கப்பட்ட பின்பு நாம் தேவனுடைய குமாரனுடைய சாயலில் வளர வேண்டும். அதற்காகத்தான் தேவன் நம்மை முன்குறித்திருக்கின்றார். ஆனால், நம் கவனங்களை உலகக்கவலைகள், ஐசுவரியத்தின் மயக்கம் போன்றவற்றில் திசைதிருப்பி, பிசாசானவன் நம்மைக் கிறிஸ்துவுக்குள் வளரத் தடைபண்ணுகிறான். அதிலிருந்து தப்பிக்கவே நமக்கு தெளிந்த புத்தி தேவைப்படுகிறது. நாம் வேத வசனங்களின் அடிப்படையில் விசுவாசத்தில் உறுதியாயிருந்து பிசாசானவனை எதிர்த்து நிற்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம்.

தேவனுக்கு விரோதமான உலக சிநேகிதங்கள் மூலம் பிசாசு நம்மை விழுங்கப்பார்க்கிறான். அநேக வேளைகளில் நல்ல விசுவாசத்தோடு இருக்கும் ஆத்துமாக்களை உலகசிநேகிதம் அல்லது உறவுகள் மூலம் சபை கூடுதலை விட்டு விடும் ஆபத்தை நாம் காணலாம். எனவேதான் ஒரு மனுஷனுக்கு சத்துருக்கள் அவன் வீட்டாரே என்றார். இயேசு இந்தக் காரியங்களை மறைமுகமாகப் பயன்படுத்தி எவனை விழுங்கலாமோ என்று பிசாசு வகைத் தேடிச் சுற்றித்திரிகிறான் என்றார். நமக்கு தெளிந்த புத்தி

இருக்கும்போது மட்டுமே நாம் தேவ வசனத்தோடு நம் வாழ்க்கையை ஒப்பிட்டு, நம் நடை, உடை பாவனைகளைச் சீர் செய்து கொள்ளமுடியும். பவுலின் சுவிசேஷப் பயணத்தில் மனுஷர்களால் ஆபத்து வந்தபோது, தேவன் காப்பாற்றியதைப் பற்றிக் குறிப்பிடுகிறார். *நான் சிங்கத்தின் வாயினின்றும் ரட்சிக்கப்பட்டேன்* என்று குறிப்பிடுகிறார் [2தீமோ. 4:17]. ஆக, நம் கிறிஸ்தவ வாழ்க்கையும் சிங்கம் போலச் சுற்றித்திரியும் பிசாசானவனால் பாதிக்கப்படாதபடிக்கு நாம் தெளிந்த புத்தி உள்ளவர்களாக இருப்பது அவசியம். சரி, தெளிந்த புத்தியை விளக்க நாம் ஒரு வசனத்தைப் பார்ப்போம். *நாம் அவபக்தியையும், உலக இச்சைகளையும் வெறுப்பது மற்றும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் உலகில் வாழ்வதே தெளிந்த புத்தி என்று பவுல் குறிப்பிடுகிறார்* [தீத்து 2:12].

மேலும், பேதுருவின் போதனையில் பார்க்கும் போது *நம் மனதின் அரையைக்கட்டிக் கொண்டு தெளிந்த புத்தியுள்ளவர்களாய் வருகையை நோக்கி இருக்க வேண்டும்* என்கிறார் [பேதுரு1:13]. நம் இடுப்பின் துணி சரியாக கட்டப்படாவிட்டால் எப்படி அவமானப்பட நேரிடும். எனக்கன்பானவர்களே நம்முடைய தெளிந்த புத்தி குறையும்போது நம் கவனங்கள் உலகப் பொருளாசையின் மீது திருப்பப்படும். நம் ஆதி அன்பும் குறைந்து விடும் ஆபத்தும் உண்டு [வெளி2:3-5] பிசாசானவனே நம் புத்தியை மழுங்கடிக்கின்றான். வேதவசனத்தின் மீதான வாஞ்சையைக் குறைத்து உலக இன்பங்களை முன்னிறுத்துகிறான். தேவகுமாரன் நல்ல விதைகளை [உபதேசங்களை] நம் உள்ளங்களில் விதைக்கையில் பிசாசுகளை விதைக்கிறவனாய் இருக்கிறான். இந்த சோதனைகளிலிருந்து தப்பிக்கவே ஆண்டவர் நம்மை இடைவிடாமல் ஜெபியுங்கள், சோர்ந்து போகாமல் ஜெபியுங்கள், விசுவாசமுள்ளவர்களாய் ஜெபியுங்கள், என்று மறுபடியும், மறுபடியும் நம்மை உற்சாகமூட்டுகிறார்.

அதுமாத்திரமல்ல, நீங்கள் சோதனைக்குட்படாதபடி விழித்திருந்து ஜெபியுங்கள் என்றும் நம் ஆண்டவர் எச்சரிக்கை செய்துள்ளார். பிசாசின் மறுபெயர் சோதனைக்காரன் என்பது நாம் அறிந்ததே. இவ்வுலக மக்களுக்கு *மன்னா* வாக வந்த ஆண்டவரையே அவன் *இந்தக் கல்லுகளை அப்பங்களாக்கி புசியும்* என்று சோதித்தான். அவன் சோதனைகள் நம்மை வீழ்த்திடாதபடிக்கே நாம் தவறாமல் ஜெபிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். ஜெபம் இல்லாத வாலிப வாழ்க்கை விபச்சாரத்திலும், வேலை ஸ்தலங்களில் லஞ்சம் போன்ற காரியங்களும், பணத்திற்காக மனிதன் எது வேண்டுமானாலும் செய்யலாம் என்ற மாயையில் பிசாசு மனுஷரைத் தள்ளி விடுகிறான்.

எனவே பிசாசின் தந்திரங்களை எதிர்த்து நிற்கத் திராணி தேவை எனவும், அதற்கான சர்வாயுதங்களையும் நாம் தரிக்க வேண்டும் எனவும் பார்க்கிறோம் [எபேசி6:11-13]. சாத்தான் தேவனுடைய பிள்ளைகளை குற்றஞ்சாட்ட எப்போதும் சுற்றித்திரிகிறான் என்று யோபு சரித்திரத்தில் காண்கிறோம். ஆனால், அவன் ஒரு தோற்கடிக்கப்பட்டவன் என்று அப்போஸ்தல உபதேசம் தெளிவாகப் போதிக்கின்றது. அவனுடைய அதிகாரங்களை நீக்கி அவைகளின் மேல் இயேசு சிலுவையில் வெற்றிசிறந்தார் [கொலோ. 2:15]. கிறிஸ்துவின் மரணம் இரண்டு வித கிரியைகளை நடப்பித்தது. ஒன்று மனித குலத்திற்கு இரட்சிப்பையும், பாவ மன்னிப்பையும் பெற்றுத்தந்தது. மற்றொன்று அதே மரணம் பிசாசானவனை அழித்துப் போட்டது [எபிரெ 2:14]. அப்படிப்பட்ட ஆண்டவரே இப்போது நாம் நமக்கு வரும் சோதனைகளில் விழுந்து போகாதபடிக்கு உதவி செய்ய வல்லவராய் இருக்கிறார் என்பதே நமது மிகப்பெரிய ஆறுதல் [எபி2:18]. எனவே, நாம் பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி கிறிஸ்துவின் சாயலில் தொடர்ந்து வளரவும் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றவும் சர்வவல்ல தேவன் தாமே நமக்கு கிறிஸ்துவின் பெலனைத் தொடர்ந்து தருவாராக. தேவக்கிருபை உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்! ★

---

## ஞானஸ்நானத்திற்குப் பிறகு இவைகளை நினைவில் கொள்ளுங்கள்

- **நீங்கள்** கடந்த கால பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள் (அப்போஸ்தலர் 2:38)
- **நீங்கள்** புதுசிருஷ்டிகளாயிருக்கிறீர்கள் (II கொரிந்தியர் 5:17)
- **நீங்கள்** கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாயிருக்கிறீர்கள் (I பேதுரு 2:8)
- **நீங்கள்** எல்லாவற்றைப் பார்க்கிலும் கிறிஸ்துவை அதிகம் நேசிக்க வேண்டியவர்களாயிருக்கிறீர்கள் (மத்தேயு 23:27)
- **நீங்கள்** மற்றவர்கள் இரட்சிக்கப்பட உதவி செய்ய வேண்டியவர் களாயிருக்கிறீர்கள் (மத்தேயு 28:19, 20)

# ஒன்றான மெய்த்தேவன்

Bro. ஆறுமுகம்

**பன்மையைக் குறிக்கும் ஒருமை**

திருமறை பேசும் *தேவன்* எனும் பதம் பன்மையிலும் பேசப்படுகிறார். ஒருமையிலும் ஆங்காங்கு பேசப்படுகிறார். இந்த பன்மையிலும் எபிரெய மொழி சொல் விளக்க அகராதி எண் 430 மற்றும் கிரேக்கச்சொல் விளக்க அகராதி எண் 2316, 2317 ஆகியவை பன்மையைக் குறிப்பிடுகிறது. எபிரெயச்சொல் அணீராதி எண் 433 தனித்துவம் உள்ளவராக (ஒருவரை மட்டும்) குறிப்பிட பயன்படுத்தப்பட்டுள்ளது. அகராதியில் சொல்லப்படும் விதமாவது ;

**எண் 430: தேவன் (God) ;**

**ஏலோ ஹிம்** - Elohym-Eloheem; plural of 433; gods in the ordinary sense; but specially used of the supreme god; occasionally applied by was of deference to magistrates; and some times as superlative angels. exeeding. god(gods)."

இதன் தமிழாக்கம்; திருமறைச்சொல் எபிரெய மொழி) எண் 430 என்பது, 433லிருந்து வரும் பன்மைச்சொல்லாகும். சாதாரண வழக்கில் அந்நிய தேவர்களையும் குறிக்கும். ஆனால் விசேஷமாக,தலையாய தேவனுக்கும்(God) பயன்படித்தப்பட்டுள்ளது; அவ்வப்பொழுது விசாரனைக் கூட நீதீபதிகளுக்கும், மரியாதைனிமித்தம் பயன்படுத்தப்படும். வேறு சில வேளைகளில் உயர்திணை பண்பைக் குறிக்கும். அதாவது தேவ தூதர்களுக்கும், அதற்கு மேலான சக்திகளுக்கும் – தேவன் God தேவர்கள் (Gods) எனும் பதங்களுக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதின் சாராம்சமாக, நாம் புரிந்து கொள்ளவேண்டியது இரண்டு முக்கிய கருத்துக்கள் தான்.

1. தேவன் என்னும் வார்த்தை தனி நபரைக் குறிப்பதில்லை, அது சாதாரணமாக விக்கிரக தேவர்களைப் பன்மையில் குறிக்கும். இதே போல, சில வேளைகளில் நீதிபதிகள் தேவதூதர்கள் போன்ற உயர்திணை நபர்களைக் குறிக்கும்.

2. ஆனால், விசேஷமாக மெய்த்தேவனாகிய ஜீவனுள்ளவரைக் குறிக்கும். இது பன்மைச் சொல். இது எப்படி சாத்தியமாகும்?

a.*மனுஷன் என்னமாய் பேசுகிறார்* என்று ஒரு ஊழியரைக் குறிப்பிட்டால் யாரோ ஒரு தனி நபரைக் குறிப்பிடுகிறோம். அநேக வேளையில் *மனுஷன் எதற்காக உழைக்கிறான்*, *ஒரு ஜான் வயிற்றுக்குத்தானே* என்றும் சொல்கிறோம். இங்கே குறிப்பிட்ட

ஒரு மனுஷனைக் குறிப்பிடாமல் உலகில் உள்ள அனைத்து மனுஷர்களையும் ஒருமையில் குறிப்பிடுகிறோம். இதை யாரும் மறுத்துப் பேசுவதில்லை. ஆனால், தேவனுடைய காரியத்தில் மட்டும் ஏன் குளறுபடிகள்? இது ***அவர்கள் ஆளக்கடவர்கள்*** என்று பன்மையிலும் முடிக்கிறார். இதுவும் பன்மையைக் குறிக்கும் ஒருமை என்பது தவிர வேறென்ன சொல்வீர்கள்?

b. ஆதியாகமம் 3:22–ல் *பின்பு தேவனாகிய கர்த்தர்:* ***இதோ மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவனைப் போலானான்*** என்பதும், தேவனாகிய கர்த்தர் (யேகாவா) இங்கே ஒரு தனி நபர் போல் பேசினாலும், ***நம்மில் ஒருவரைப் போலானான்*** என்பதன் மூலம் பண்மை விளங்கப் பண்ணப்படுகிறது.

தேவன் தம்மை மட்டும் நாம், நமது, நம்மில் என்று சில ***ராஜாக்களும் மகான்களும்*** என்று அழைக்கப்பட்டவர்களும் சொன்னது போல் குறிப்பிடுகிறார் என்று ஒரு *விள்ளங்க நபர்* குறிப்பிடுகிறார். தற்பெருமையும் கர்வமும் கொண்டு திமிராகப் பேசிய ***ராஜாக்களும் மகான்களும்*** தேவனுக்குச் சமமானவர்களா? இது உண்மையானால் மற்ற மொழிகளில் இப்படிப்பட்ட பதம் ஏன் பயன்படுத்தப்படவில்லை?

இன்னொருவர் நாம், நமது போன்ற பதங்களை ***தாம் தமது*** என்று வாசித்துப் பாருங்கள் என்கிறார். வேத வார்த்தை களை இவர் விருப்பத்துக்கு மாற்றுவதற்கு இவருக்கு உரிமையளித்தது யார்? (உபா.4:2,1கொரி 4:6; பேதுரு 4:11, வெளி.22:18,19).

**இந்த இரண்டாவது நபர் திரியே தத்துவத்தை ஆதரிப்பவர்.**

திருமறை பேசும் ஒருமை என்பது இரண்டு வகை பொருளையுடையது.

1. தனித்துவத்தைக் குறிக்கும் ஒருமை (Singular)

2. ஒற்றுமையைக் குறிக்கும் 'ஒருமை (Plural word in singular term). உதாரணம் எபேசியர் 4:3 ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்ள வேண்டும் என்றவர் ஏழு தனித்தனி தூண்களைக் கூறுகிறார். சில உதாரணங்களைக் காண்போம்.

**புருஷன் – மனையிவியின் ஒற்றுமை**

ஆதியாகமம் 2:24 மத்தேயு 19:6 இந்த இரண்டு வசனங்களிலும் புருஷன் தன் தகப்பனையும் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைத்திருப்பான். அவர்கள் இருவரும் ***ஒரே மாம்சமாயிருப்பார்கள்***.

இந்த வசனங்கள் ஒருமையை வலியுறுத்தி புருஷனும் மனைவியுமாகிய இருவரும் ஒன்றாயிருப்பார்கள் என்று கூட சொல்லவில்லை. இருவரும் ***ஒரே மாம்சமாயிருப்பார்கள்*** என்று சொல்கிறது. திருமணம் பண்ணிக்கொண்ட எத்தனை தம்பதி ஒரே மாம்சமாகி ஒரே சரீரத்தில் நடமாடிக் கொண்டுள்ளனர்?இதிலே வரும் பிண்ணிப் பிணைந்திருக்கும் ஒற்றுமையைக் குறிப்பிட்டு தேவன் பேசுகிறாரா? அல்லது இருவரும் ஒரே உருவமாவதைப் பேசுகிறாரா? உணர்வுள்ளவர்கள் யோசிக்கட்டும்.

– தொடர்ச்சி அடுத்த இதழில்

# உறுதி, உண்மை, உருக்கம், உழைப்பு, உயர்வு

Bro. பிலிப்

**தே**வனால் படைக்கப்பட்ட உயிரினங்களில் மனித இனம் அநேக விசயங்களில் வித்தியாசமானவராயிருக்கின்றான். பூமியில் தன் வாழ்நாள் செழிப்புள்ளதாய் சந்தோசமாய், சமாதானமாய் இருக்கவேண்டும் என்பது அவன் விருப்பம்: இதில் தவறேதும் இல்லை. மனிதனைக் குறித்து தேவனுடைய திட்டமும் அதுவே. பின்பு தேவன் அவர்களை நோக்கி நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்பி அதைக் கீழ்ப்டுத்தி.... சகல ஜீவசந்துக்களையும் ஆண்டு கொள்ளுங்கள், என்று சொல்லி அவர்களை ஆசீர்வதித்தார். ஆனால் மனிதனின் நிலை என்ன? பாம்பு, பல்லி, பறவைகளைக் கண்டால் கூட பயந்து அவைகளுக்கு அடங்கிப் போகிறான். எப்பொழுதும் சஞ்சலமும் சளிப்பும், போராட்டமும் தோல்வியுமே வாழ்க்கையாயிருக்கிறது. மனிதன் எதிர்பார்த்த செழிப்பு சந்தோசம், சமாதானம் இல்லை. ஆனால் இதோ உயிரோடிருக்கும் நாளெல்லாம் மனுஷன் புசித்துக் குடித்து சூரியனுக்குக் கீழே தான் படும் பிரயாசம் அனைத்தின் பலனையும் அநுபவிப்பதே நலமும், உத்தமுமான காரியம்....'' என்று வேதம் சொல்கிறது (பிர5:18). அதே சமயம் இப்படி வாழ்க்கையை அனுபவிக்க தேவனுடைய அநுக்கிரகம் தேவை (5:19) என்பதையும் வலியுறுத்துகிறது, வழியையும் காட்டுகிறது. அதுதான் கற்பனையை கைக்கொள்ளுகிறவன் ஒரு தீங்கையும் அறியான் (பிர8:5). ஆம், உலகத்தோற்றமுதல் இன்றுவரை இதுதான் உண்மை. அன்பானவர்களே! நமது வாழ்க்கை வளமாயிருக்க தொடர்ந்து வரும் தேவ ஆலோசனைகளைக் கவனமாய் கவனித்து, கவலையின்றி களிப்புடன் வாழ வாழ்த்துகிறேன். தேவனுடைய கற்பனைகளைக் கைகொள்ளத் தீர்மானித்து வாழ்ந்து கொண்டிருக்கிற நம் வாழ்க்கையில் 4 நிலைகளில் நாம் சரியாய் இருந்தால் 5–வது நிலையை நமக்காகத் தேவன் பொறுப்பேற்றுக்கொள்வார். ஆம், உறுதி உண்மை, 3–வது உருக்கம், 4–வது உழைப்பு ஆகிய பண்புகள் நம்மில் இருந்தால் நம் வாழ்க்கையில் 5–வது உயர்வு என்ற நிலையை தேவன் கொடுப்பார். இந்த உண்மைகளுக்கு ஆதாரமாக தேவன் நம்முன் நிறுத்தும் அமைதியாக சாதனை படைத்த மனிதன்தான் யாக்கோபின் 11–வது மகன் *யோசேப்பு* (ஆதி:37;39–50).

ஒரு வீடு நிலைத்து நிற்க அஸ்திபாரமும், கட்டிடமும் உறுதியாய் இருக்க வேண்டும். அந்த உறுதியின் அடிப்படையில் தான், நாம் மட்டுமல்ல, நம் சந்ததியும் அந்த வீட்டில் வாழ்ந்து

சுகித்திருப்பார்கள். அதைப்போலவே *நமக்கு வாழ்வளித்தவர் தேவன்* [சங்95:6]; வாழச்செய்பவரும் அவரே [71:8]. ஆகவே, நான் நம்புகிறது அவராலே வரும் [62;5]; நான் அசைக்கப்படுவதில்லை என்ற உறுதியான விசுவாசம் தேவனுடைய வார்த்தையின் பேரில் நமக்கு இருக்க வேண்டும். இப்படிப்பட்ட உறுதியான விசுவாசத்தை தன் வாலிப வயதில் [17வயது] பெற்று 110 வயது வரை மன நிறைவான வாழ்க்கை வாழ்ந்தவன் தான் யோசேப்பு. இவன் தன் 17–ஆம் வயதில் தேவன் சொப்பனத்தின் மூலம் தன் எதிர்கால நிலை குறித்து வெளிப்படுத்திய உண்மையை உறுதியாய் பிடித்துக் கொண்டான். இரண்டு சொப்பனங்களின் ஒரே கருத்து *எதிர் காலத்தில் யோசேப்பின் 11-வது சகோதரர்களும், தகப்பனும் தாயும் கூட யோசேப்பை வணங்கும் நிலையில் அவன் உயர்த்தப்பட்டிருப்பான்* என்பதாகும். இந்த தேவ வெளிப்பாட்டை தேவதிட்டத்தை, எவ்வித பயமும் தயக்கமுமின்றி உள்ளதை உள்ளபடி தன் சகோதரரிடத்திலும், தகப்பனிடத்திலும் தைரியமாய்ச் சொன்னான். இப்படி உண்மையைச் சொன்னதால் சகோதரர்கள் யோசேப்பைப் பகைத்தனர். தகப்பன் அவனைக் கடிந்து கொண்டான். ஆனாலும், தேவத்திட்டம் நிறைவேறும் என்று உறுதியாய் நம்பினபடியால் யோசேப்பு இவைகளைக் குறித்து கவலைப்படவேயில்லை.

இன்றும் கூட இதே நிலைதான் நிலவுகிறது. தேவனால் தெளிவாய் வெளிப்படுத்தப்பட்ட சபை குறித்து, இரட்சிப்பு, விசுவாசம், நித்தியஜீவன் குறித்து உபதேசிக்கும்பொழுது மற்றவர்கள் நம்மை பகைக்கிறார்கள். சத்துருவாய் நினைக்கிறார்கள். ஆனாலும் சத்தியத்தை சத்தியமாய் போதிப்பதில் நாம் உறுதியாயிருப்போம். ஏனெனில், உலகம் பகைத்தாலும் இயேசு நம்மை சிநேகிதர்களாக ஏற்றுக்கொள்கிறார். *நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால் என் சிநேகிதரராயிருப்பீர்கள்* என்கிறார் [யோ15:14]. மேலும் இந்நிலை இன்றல்ல முதல் நூற்றாண்டிலும் இருந்தது. இதைத்தான் பவுல், *நான் உங்களுக்குச் சத்தியத்தை சொன்னதினாலே உங்களுக்குச் சத்துருவானேனோ? என்கிறார் (கலா6:16). ஆம் மெய்யான சத்தியத்தை பிரசங்கித்தபொழுது, சொந்த ஜனங்கள் அவர்களைப் பகைத்தனர்; சிறையில் அடைத்தனர்; சிதறியடிக்கச் செய்தனர். ஆனாலும் வீறு கொண்டு எழுந்த அவர்கள் இன்னும் அதிக வீரியத்தோடு பிரசங்கித்தார்கள்..... மனுஷருக்குக் கீழ்ப்படிவதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிவதே அவசியமாயிருக்கிறது''* என்றும் [அப்5:29], *நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக் கூடாதே* [அப்4:20] என்று உபதேசிப்பதில் உறுதியாய் நின்றார்கள். சபை வளர்ந்தது. சீஷர்கள் பெருகினார்கள் என்பதே சரித்திரம். யோசேப்பை பகைத்து அவனை எகிப்துக்கு அடிமையாய் விற்றுப் போட்டதால் தேவதிட்டம் ஒடுக்கப்பட்டது, அழிக்கப்பட்டது என்பது யோசேப்பின் சகோதரர்களுடைய எண்ணம். ஆனால், வாக்கு மாறாத மெய்யான தேவன், அடிமை யோசேப்பை அதிபதியாக்கினார் என்பதே சரித்திரம்.

அன்பானவர்களே! நமக்குக் கொடுக்கப்பட்ட இந்த வாழ்க்கையிலே, நம்மிடம் கொடுக்கப்பட்ட மெய்யான சத்தியத்தை உறுதியாய் உயர்த்திப்பிடித்து நாமும் சரித்திரம் படைப்போம். தேவன் நம்மை உயர்த்துவார்.

தேவதிட்டத்தை தெளிவாய்ப் புரிந்துகொண்டு, உறுதியாய் நின்ற யோசேப்பின் நிலை அடிமை வாழ்வு. இங்கும் யோசேப்பின் மனநிலை *வாழ்வு தந்தவர் என் தேவன்* என்பதே. ஆகவே, ***அடிமை நிலைமை என்பது தேவன் நான் உழைக்கும்படியாய்,*** *பிறர்க்கு முன்* ***உண்மையாயிருக்கும்படியாய் எனக்குக் கொடுத்த*** *வாய்ப்பு* என்றே கருதினான். அடிமை என்று குறுகிப்போகவில்லை. நிமிர்ந்து நின்றதால் கர்த்தர் யோசேப்போடே இருந்து அவனைக் காரியச்சித்தியுள்ளவனாக்கினார். அவன் செய்கிற யாவையும் கர்த்தர் வாய்க்கப்பண்ணினார். இந்த உண்மையான உழைப்பை அவனது எஜமான் கண்டு தன் வீட்டிற்கே அதிகாரியாக உயர்த்தினான் [ஆதி.39.1-6].

அன்பானவர்களே! தேவன் நாம் உழைக்கும்படி இப்பூமியில் கொடுத்த வாய்ப்பை உண்மையாய் செய்வோம். ***அவனவன் தன் வேலைக்கேற்ற கூலியைப் பெறுவான்*** [1கொரி3:8]. ஊழியம் செய்கிறவன் ஊதியத்திற்கு, உயர்வுக்குப் பாத்திரவான் [11தெ3:10]. ***ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாது*** என்பதை பவுல் மூலம் கட்டளையாகப் பெற்றிருக்கிறோம். ஆகவே, உண்மையாய் உழைப்பதில் உறுதியாயிருப்போம். தேவனின் வல்ல கரம் நம்மை உயர்த்தும். சரீர வாழ்க்கைக்காக மட்டுமல்ல.... ஆவியிலே அனலாயிருந்து கர்த்தருக்கென்று ஊழியம் செய்வோம். [ரோமர் 12:11]. கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்கிறவன் தேவனுக்குப் பிரியனும் மனுஷரால் அங்கீகரிக்கப்பட்டவனுமாயிருக்கிறான் [ரோமர் 15:18]. என்பதையும் ரோ 6:10ன் படி தேவனுடைய நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தை தேவன் மறப்பவரல்ல; மேலும் ***ஒருவன் கிறிஸ்துவுக்கென்று ஊழியம் செய்தால் அவனைப் பிதாவானவர் கனப்படுத்துவார்*** என்பதையும் புரிந்து கொண்டு ஊழியத்தில் உண்மையாய் உறுதியாய் உழைத்தால் இம்மையிலும், மறுமையிலும் உயர்வு உண்டு.

போர்த்திபர் வீட்டிலே யோசேப்பு வாழ்ந்தபோது அவனுடைய வாலிப வயதின் பரிசுத்த வாழ்க்கைக்கு மாபெரும் சோதனை வந்தது. போர்த்திபரின் மனைவி யோசேப்பை தன்னோடு உறவு கொள்ள மிகவும் வற்புறுத்தினாள். யோசேப்பு இணைங்கியிருந்தால் தன் வாலிப கால சரீர இச்சைக்குத் தீனி போட்டிருக்கமுடியும்; அந்த வீட்டில் இன்னும் அதிகமான

சலுகைகளைப் பெற்றிருக்க முடியும். யோசேப்போ, மோசேயைப்போல *அந்நித்தியமான பாவ சந்தோசங்களை அனுபவிப்பதைப் பார்க்கிலும் துன்பத்தை அனுபவிப்பதையே தெர்ந்து கொண்டு,தேவனுக்கு விரோதமாய் பாவஞ் செய்யக்கூடாது* என்பதில் உறுதியாயிருந்து, சிறைக்குச் செல்ல ஒப்புக்கொடுத்தான். (ஆதி.39:720). அவனுடைய உறுதிக்குப் பரிசாக தேவன், ராஜாவின் மகளையே மனைவியாக ஒப்புக்கொடுத்தார்.

அன்பானவர்களே! நாம் ஒவ்வொருவரும் நம்மை கற்புள்ள கன்னிகையாக கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக் கொடுக்க நியமிக்கப்பட்டிருக்கிறபடியால் (2கொரி.1:2) உலக இச்சைகள் நம்மைத் தீட்டுப்படுத்திவிடாதபடி பரிசுத்தமாய் காத்துக் கொள்வதில் உறுதியாய் இருப்போம். அப்பொழுது மணவாளனாகிய கிறிஸ்து வரும்பொழுது அவரோடு கூட மணவாட்டியாகிய (சபை) நாம் பரலோகத்திலுள்ள தேவனுடைய கரங்களுக்கு உயர்த்தப்படுவோம் (எபே.5:27). அறையிலிருந்த யோசேப்பு *ஏற்றவேளையில் தேவன் தன்னை உயர்த்தும்படி அவருடைய பலத்தை கைக்குள் அடங்கி இருப்பதில் உறுதியாயிருந்தான்* (1பேதுரு5:6). தேவ வழி நடத்துதல் நன்மைக்கே என்று ஏற்றுக் கொண்டான். அதனால் சிறையிலும் அவன்தான் தலைவன். அவன் வசம் ஒப்புவிக்கப்பட்ட பானபாத்திரக்காரன், சுயம்பாகிகளின் கனவுகளுக்கு தேவ வெளிப்பாட்டைக் கூறினான். அதன்படி பானபாத்திரக்காரனுக்கு விடுதலையும், அதே வேலையும் கிடைத்தது. ஆனால் அவன் யோசேப்பை மறந்து விட்டான். இதுதான் மனிதனின் இயல்பு. ஆனால் யோசேப்புக்கு 17-வயதில் கொடுத்த வாக்கை தேவன் மறக்கவில்லை. பார்வோனுக்கும் இரண்டு சொப்பனங்களைக் காணச் செய்து, யோசேப்பை ராஜாவுக்கு முன் நிறுத்தினார். ஆம், யோசேப்பு தேவன் தன்னிடம் ஒப்படைத்த சகல வேலைகளிலும் உண்மையாய், உறுதியாய் உழைத்தபடியால், *அவனை நீசருக்கு முன்பாக அல்ல, ராஜாவுக்கு முன்பாக நிற்கச் செய்தார்* (நீதி. 22:29). அங்கும் யோசேப்பை அடிமையாக சிறைக் கைதியாக அல்ல, தேவ ஆவியைப் பெற்ற விவேகமும், ஞானமுள்ளவனாகவும் நிறுத்தினார். இவைகளைக் கண்ட ராஜா அவனை அத்தேசத்தின் அதிபதியாக உயர்த்தி கனப்படுத்தினார் (ஆதி41:15-46). யோசேப்பை உயர்வுக்கு வழிநடத்திச் சென்றதில் அவனுடைய மன உருக்கத்திற்கும் பங்குண்டு. சகோதரர்கள் பகைத்தபோதும், பசியால் தவிக்கும் அவர்கள் மேல் மனதுருகி உணவைச் சுமந்து காடுகளில் அலைந்து சென்றதால்தான் அவன் எகிப்துக்கு செல்ல முடிந்தது. சிறையில்

பானபாத்திரக்காரனிடம் *உங்கள் முகம் துக்கமாயிருக்கிறது என்ன?* என்று விசாரித்த அந்த மன உருக்கம்தான் யோசேப்பை ராஜாவுக்கு முன் நிறுத்தி உயர்வு பெற வழி வகுத்தது. ஆம், ஆபிரகாமுக்கு சோதோம், கொமோரா பட்டணத்து மக்கள் மீதும், மோசேக்கு இஸ்ரவேல் மக்கள் மீதும் எஸ்தருக்கு தன் இனத்தார் மீதும் யோபுவுக்கு தன் சிநேகிதர் மீதும், பவுலுக்கு சபையார் மீதும் இருந்த மன உருக்கம் தேவ பிள்ளைகளாகிய நம்மிடத்திலும் இருக்க வேண்டும். நமக்கு முன் தேவனற்றவர்களாக நரகத்தை நோக்கி ஓடிக் கொண்டிருப்பவர்களின் ஆத்ம அழிவைத் தடுப்பது, மீட்டெடுப்பது தேவனிடத்தில் இரக்கம் பெற்ற நம் கடமை என்பதை உணர்ந்து, உறுதியாய், உண்மையாய், உருக்கத்தோடு உழைப்போமேயானால் இப்பூமியில் சந்தோசம், சமாதானத்தில் உயர்ந்து நிற்போம். *உண்மை உறுதியாய், பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிற படியால் நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர் என்றும்'' ''உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்* [நீ28:20] என்ற வாக்குத்தத்தங்கள் யோசேப்பின் வாழ்க்கையில் நிறைவேறிற்று. போராட்டம் 13 ஆண்டுகள்தான் [17-30=13]. ஆனால் 30 முதல் 110 வயதுவரை 80 ஆண்டுகள் பூரண சமாதானத்துடன் யோசேப்பு தன் முழு குடும்பத்தோடும் வாழ்ந்தான்.

அன்பானவர்களே! நம் வாழ்க்கையிலும் தேவ கற்பனைகளை உறுதியாய்ப் பற்றிக்கொண்டு, உண்மையாய், உருக்கமாய், உழைப்போமானால் உயர்வு பெறுவோம். ஆமென். ★

---

## நாளும் நடப்பும்

- இரயிலில் அதிக சுமை எடுத்துச் செல்லும் பயணிகளுக்கு 6 மடங்கு அபராதம் – இந்திய ரயில்வே
- பிளாஸ்டிக் பொருட்களுக்குத் தடை 2019 ஜனவரி முதல் தமிழகத்தில் அமல்! – தமிழக அரசு
- குரூப் 1 தேர்வு எழுதுவதற்கான வயது உச்ச வரம்பு 37 ஆக உயர்வு – தமிழக அரசு
- பிளஸ்1, பிளஸ்2 மொழிப் பாடங்களுக்கு இனி ஒரே தேர்வு – அரசாணை வெளியீடு
- சந்திராயான் -2. இந்த ஆண்டு இறுதியில் விண்ணில் ஏவப்படும் – இஸ்ரோ
- ரேஷனில் பொருள்களைப் பெற கைரேகைப் பதிவு என்ற புதிய நடைமுறை விரைவில் அமல்!

நான் ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியம் பெற்றிருக்கிறேன் (எபே 2:16)

இருளின் அதிகாரத்தினின்று விடுதலையாக்கப்பட்டு அதன் பின் குமாரனுடைய ராஜ்ஜியத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கிறேன் (கொலோ. 1:13)

நான் மீட்கப்பட்டிருக்கிறேன். என் பாவங்களெல்லாம் மன்னிக்கப்பட்டிருக்கிறது (கொலா 1:14)

கிறிஸ்து மகிமையின் நம்பிக்கைக்காக எனக்குள் இருக்கிறார் (கொலொ 1:27)

நான் ஆவிக்குரிய ரீதியில் விருத்தசேனம் பண்ணப்பட்டிருக்கிறேன். என்னுடைய பாவ சரீரம் களைந்து போடப்பட்டிருக்கிறது (கொலோ 2:11)

நான் கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டு எழுப்பப்பட்டு, கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பிக்கப்பட்டிருக்கிறேன் (கொலோ 2:12, 13).

நான் பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியைப் பெற்றிருக்கிறேன் (2 தீமோ 1:7)

நான் எனது ரீதியின் கிரியைகளின் படி இரட்சிக்கப்படாமல் அவருடைய இரக்கத்தின் படி இரட்சிக்கப்பட்டிருக்கிறேன் (தீத்து. 3:5)

நான் இரக்கத்தைப் பெறவும் கிருபையை அடையவும் தைரியமாய் கிருபாசனத்தண்டனை சேரும் உரிமை பெற்றிருக்கிறேன் (எபி. 4:16)

நான் திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவனாகும் படி மகா மேன்மையும், அருமையுமான அருமையுமான வாக்குத்தத்தங்கள் எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது ( பேது. 1:4).